வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 03.01.2022 திங்கட்கிழமை இதழ் : 29 பக்கங்கள் : 16

## சுமந்திரன் இல்லத்தில் கூடித் தயாரித்த ஆவணத்தை நிராகரித்தது தமிழ் அரசு



### சிறிதரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 03

கூட்டாட்சி தொடர்பில் சிந்தியுங்கள் என்று 6ஆண்டுகளுக்கு முன்பே பாரதப் பிரதமர் நரேந்திர மோடியே கூறியுள்ள நிலையில், நாம் இன்றும் அந்த 13ஐ கோரப் போகின்றோமா என்ற பெரும் கேள்வி உள்ளது என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அத்துடன், நேற்று முன்தினம் சுமந்திரனின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு கட்சிகள் கூடித் தயாரித்த புதிய நகலை தமிழ் அரசுக் கட்சி நிரா கரித்து விட்டது என்றும் கூறினார். 15

## பச்சை மிளகாய் 1,500 ரூபா!

கொழும்பு, ஜன. 03

கம்பஹா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மரக்கறிகளின் விலைகள் மிக அதிகமாக உள்ளன.

குறிப்பாக ஒரு கிலோ பச்சை மிளகாய் நேற்று 1,000 ரூபா முதல் 1,500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

காய்கறிகளின் தட்டுப் பாட்டால் விலை அதிக ரித்தாலும், வியாபாரிகள் தமது இஷ்டத்திற்கு விலையை அதிகரிப்பதாக நுகர்வோர் குற்றம் சுமத்து கின்றனர். (அ)

## எந்த விவாதத்துக்கும் இடமின்றி கூட்டு ஆவணம் கைச்சாத்தாகும்



### இரா. சம்பந்தன் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஜன. 03

இந்தியாவுக்கு அனுப்ப வுள்ள கூட்டு ஆவணம் கைச் சாத்திடப்படும் என்பதில் எந்த விவாதமும் இல்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரி வித்தார்.

அந்த ஆவணம் தொடர்பி லான செயல்பாடுகள் இன்னும் ஓரிரு தினங்களில் நிறைவடை யும் எனத் தாம் எதிர்பார்க்கிறார் என்று நேற்றுக் கூறினார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மிகவும் முக்கியமா னது என்பதனால் அரசி யல் கோரிக்கைகளை முன்வைக்கும் போது 15

## ஜனாதிபதி கோட்டாபயவுக்கு 'ஸ்ரீ லங்காதீஸ்வர பத்ம' விருது



கொழும்பு, ஜன. 03

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவிற்கு 'ஸ்ரீ லங்கா தீஸ்வர பத்ம விபூஷண' விருது வழங்கப்பட்டுள்ள 15

## 15 ஆயிரத்தை கடந்தது கொரோனா உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 03

நாடளாவிய ரீதியில் கோவிட்-19 தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள் ளது.

நேற்றுமுன்தினம் கோவிட்-19 தொற்றால் 24 உயிரிழப்புகள் ஏற்பட் டன என்று சுகாதாரப் பிரிவு உறுதி செய் தது. இதைய டுத்தே இந்த அதி 15

## மட்டு. பொலிஸ் அலுவலர் யாழில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 03

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் நிலை யத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் மர்ம 15

## 42,500 பட்டதாரிகளுக்கு இன்று நிரந்தர நியமனம்!

கொழும்பு, ஜன. 03

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவின் சௌபாக்கிய தொலை நோக்கு கொள்கைத் திட் டத்திற்கு அமைவாக அரச சேவையில் இணைத் துக் கொள்ளப்பட்ட பயி லுநர் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங் கும் நட வடிக்கை இன்று 15

### இன்று அமைச்சரவை கூட்டம்

## கப்ரால், ஆட்டிக்கல அழைக்கப்படவில்லை

கொழும்பு, ஜன. 03

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் செயலா ளர் எஸ். ஆர். ஆட்டிக்கல ஆகியோர் இன்று நடை பெறவுள்ள அமைச்சர வைக் கூட்டத்துக்கு அழைக்கப்படமாட்டார் கள் என அறியமுடிகிறது.

இன்று கூட்டத்தில் பல அமைச்சரவைப் பத்திரங்கள் விவா திக்கப்பட உள்ள தாலும், கடந்த 15

## சிங்கள - பௌத்த மக்களை பாதுகாப்பது எனது பொறுப்பு

### பிக்குகள் முன்னிலையில் ஜனாதிபதி உரை!



கொழும்பு, ஜன. 03

என்னை இந்த நாட்டின் முதல் குடிமகனாக ஆக்குவ தற்கு பல அர்ப்பணிப்புகளை செய்த சிங்கள - பௌத்தர் களையும் அவர்களின் பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் பூரண பொறுப்பு எனக்கு 15

## மக்களை கொல்லாமல் கொல்லும் அரசாங்கம்

### எதிர்க் கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 03

மக்களை பாதுகப் பதற்காகவே அரசாங்கம் என்ற ஒன்று அமைக்கப் படுகின்றது. தற்போதைய அரசாங்கம் மக்களை கொல்லாமல் கொல்கின் றது. இவ்வாறு பார்க்கும் போது அரசாங்கம் இனப் படுகொலை செய் யும் அரசாங்கமா கவே உள்ளது 15

## பாடசாலை பஸ் சேவை கட்டணம் 20 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது!

கொழும்பு, ஜன. 03

எரிபொருள் நிவாரண கோரிக்கைக்கு அரசாங் கம் இதுவரை எந்த பதி லையும் வழங்காததால் பாடசாலை போக்கு வரத்து சேவை கட்ட ணத்தை இன்று முதல் 20 வீதத்தால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை அனைத்து மாகாண பாடசாலை மாண 15

## இந்தியா இலங்கைக்கு 100 கோடி டொலர் கடன்

கொழும்பு, ஜன. 03

டொலர் நெருக் கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு 90 கோடி அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 18 ஆயிரத்து 900 கோடி ரூபாயை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. 15

# இப்படியும் நடக்கிறது...!

"தமிழ் மக்களை ஒதுக்கி தனித்துப் பிரிந்திருந்தால் முஸ்லிம் மக்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகும் என்பதை அவர்களின் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.", இவ்வாறு எச்சரித்திருக்ககிறார் ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன்.

நீண்ட அரசியல் அனுபவத்தைக் கொண்டுள்ள சுரேஷ் அடிக்கடி இவ்வாறு அறிக்கைகள் விடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் இணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்ற விடயம் முச்சந்தியில் நிற்பதாக கூறப்படும் இந்தவேளையில், அதுவும் கடைசியாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையொப்பமிட முஸ்லிம் தரப்பு தயக்கம் காட்டுகின்ற இந்த வேளையில், தமிழ் மக்களை ஒதுக்கி தனித்துப் பிரிந்திருந்தால் அது முஸ்லிம்களின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்று சுரேஷ் எச்சரிப்பது நியாயமானதாகக்கூட இருக்கலாம்.

ஆனால், முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்த அக்கறை நிச்சயம் சுரேஷ் பிரேமச்சந்திரனை விட முஸ்லிம் தலைவர்களுக்கு இருக்காது என்று நினைப்பது நிச்சயம் தவறான கணிப்பாகவே இருக்கும்.

அவர்கள் முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்த அக்கறை காரணமாகத்தான் இந்த ஆவணத்தில் கையெழுத்திட தயக்கம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களை நோக்கி ஆதரவுக் கரம் நீட்டுவதை விடுத்து, அவர்களை எச்சரிப்பது எந்த வகையிலும் தமிழ் மக்ளுக்கு உதவப் போவதில்லை.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றித்து பயணம் செய்தால் மாத்திரமே இரண்டு இனங்களின் இருப்பையும் பாதுகாக்க முடியும், எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் தலைவர்களும் நல்ல முடிவுகளை எடுக்கவேண்டும் என்று நட்புக்கரம் நீட்டுவதை விடுத்து, நீங்கள் எங்களுடன் சேர்ந்து இயங்காவிட்டால் உங்கள் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்று சொல்வது அவர்களை மிரட்டுவதுபோல ஆகிவிடும்.

பதின்மூன்றை அமுல்படுத்துவதை வலியுறுத்தி கடிதம் அனுப்ப சம்மதம் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அதுவே இலங்கை இந்திய ஒப்பந்தம் என்றதும் தயக்கம் காட்டுவதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

எனவே, அவர்களை நோக்கி நம்பிக்கையை விதைப்பதைவிடுத்து மிரட்டல்பாணியில் கோரிக்கை விடுப்பது சரியானதுதானா என்று சுரேஷ் சிந்திக்கவேண்டும்.

இந்த செய்தியைப் படித்தபோதுதான் சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தாரென வெளியாகியிருந்த செய்தி ஒன்றைப் படித்தபோதும் ஏற்பட்டிருந்தது.

"உரிய முறையில் இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு கிட்டுவதை இந்தியா உறுதிசெய்யுமானால், தமிழர் தாயகத்தில் சீனா உட்பட வேறு எந்த வல்லாதிக்க சக்தியும் காலூன்றாமல் தமிழர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்ற உறுதிமொழியை இந்தியாவுக்கு வழங்கியிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர்." இதுதான் அந்தச் செய்தி.

பிரதமர் மோடி சந்திக்க அழைத்தபோது அங்கு சென்று அவரைச் சந்திப்பதையே தவிர்க்கின்ற ஒரு கட்சியின் பேச்சாளர், இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழியை படிக்கின்றபோது இந்திய அதிகாரிகள் குறிப்பாக இந்திய தூதரக அதிகாரிகள் அதிர்ந்து போயிருப்பார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு கிடைத்தால் அந்த அதிகாரத்தைப் பெறுகின்ற தமிழர்கள் சீனா உட்பட வேறு எந்த வல்லாதிக்க சக்திகளும் வடக்கு, கிழக்கில் காலூன்றுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என்று சொல்லியிருந்தால் அது வரவேற்புக்குரியதாகியிருக்கும்.

நமது தலைவர்கள் ஊடகங்களுக்கு எதையாவது சொல்லிக் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காக இவ்வாறு சொல்லிக்கொண்டே இருப்பது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.!

**- ஊர்க்குருவி**

# பெண்ணின் சடலம் மீட்பு

*நுவரெலியா, ஜன. 03*

தலவாக்கலை - வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் உள்ள மீன்வளர்ப்பு நீர்தேக்கத்தில் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவத்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வட்டகொடை - மடக்கும்புர தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான கந்தையா ரமணி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நீர்தேக்கத்தில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். ஸ்தலத்திற்கு விரைந்த தலவாக்கலை பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின் மீட்டனர்.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரழந்தாரா அல்லது நீர்தேக்கத்தில் தவறி விழுந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்தேக்கத்தில் எறிந்து சென்றார்களா எனப் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# காத்தான்குடி கொள்ளை 2 சந்தேகநபர்கள் கைது

*மட்டக்களப்பு, ஜன. 03*

மட்டக்களப்பு காத்தான்குடியில் வீடு உடைத்து 12 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்த சந்தேகத்தில் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி இரவு காத்தான்குடி மீன்பிடி இலாகா வீதியிலுள்ள வீடு ஒன்றின் மலசலகூட கூரையை உடைத்து உள்நுழைந்து அலுமாரியில் இருந்த 12 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

வீட்டின் உரிமையாளர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று அக்கரைப்பற்றில் வைத்து இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இருவரிடமிருந்தும் 6 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# புத்தாண்டு இரவில் 188 பேர் படுகாயம்!

*கொழும்பு, ஜன. 03*

புத்தாண்டு தினமான நேற்று முன்தின இரவு மட்டும் நாடு முழுவதும் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களில் சிக்கி 188 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு சிகிச்சை பெறுபவர்களில் 47 பேர் வீதி விபத்துக்களில் காயமடைந்தவர்களாவர்.

மேலும், நேற்று முன்தினம் இரவு பட்டாசு வெடித்தபோது காயமடைந்த நால்வர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கல்வி TV CHANNEL-1

**03.01.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி TV CHANNEL - 2

**03.01.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
03.01.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 730 1370**

## சவால்களை வெற்றிகொள்ள முடியுமா?

அரசாங்கத்திற்குள் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சரவை மாற்றமொன்று தொடர்பில் ஆராயப்படுகின்றது. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கும், மொட்டு அணியினருக்கும் இடையில் காணப்படும் உள் முரண் பாடுகளுக்கும் அமைச்சரவை மாற்றங்களுக்கும் இடையில் தொடர் புண்டு. குறிப்பாக, யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெ ரிக்க நிறுவனத்திற்கு வழங்கியமை தொடர்பில் இடம்பெற்றுவரும் உள்முரண்பாடுகள், அமைச்சரவை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தலாம். இந்த அடிப்படையில் நோக்கினால் அரசாங்கத்தின் செயல்பாடுகளை விமர்சித்துவரும் சிலரின் பதவிகளில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் பொறுப்புக்கள் மாற்றப்படுமானால், மொட்டு அணிக்குள் பிளவுகளும் ஏற்படலாம்.

நாடு பொருளாதார ரீதியில் பெரும் சவால்களை சந்தித்து வரும் நிலையில், அதனை சமாளிப்பதற்கு இவ்வாறான பதவி மாற்றங்கள் எந்த வகையில் பயனளிக்கும்? பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட போதும், பல மாற்றங்கள் ஏற்படுமென்று அரச தரப் பிலுள்ளவர்கள் நம்பினர். அரசியலில் பெரியளவில் மாற்றங்களை ஏற்படுத்தும் - பஸில் பல மாற்றங்களை ஏற்படுத்துவார் என்றெல்லாம் கூறப்பட்டது.

மொட்டின் ஆதரவாளர்கள் மத்தியிலும் அப்படியானதோர் அபிப் பிராயம் காணப்பட்டது. ஆனால், நபர்களை மாற்றுவதால் இன்றைய நெருக்கடி நிலையை, ஒருபோதுமே சமாளிக்க முடியாதென்பதை 'ஈழநாடு' சுட்டிக்காட்டியிருந்தது. நாம் கணித்தவாறே விடயங்கள் இடம்பெற்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்படவுள்ளன.

மக்களால் சுமக்க முடியாதளவிற்கு விலைவாசிகள் அதிகரித்து செல்கின்றன. விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்புக்கள் அதிகரித்து செல்கின்றன. பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கியில் விவசாயி களின் பங்கு அளப்பரியது. உரத்தடை காரணமாக விவசாயிகள் மோசமான பாதிப்பை எதிர்கொண்டிருக்கின்றனர். இதன் காரண மாகவே மரக்கறி விலைகள் வரலாற்றில் என்றுமில்லாதவாறு உயர்ந்திருக்கின்றது. தற்போது எரிவாயு தட்டுப்பாடு பிறிதொரு பிரச் னையாக உருவெடுத்திருக்கின்றது. இந்த நிலையில் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை அறிமுகம் செய்யப்போவதாக அமைச்சர் கூறுகின்றார்.

பொருளாதார நெருக்கடி இப்படியே தொடருமானால் இந்த ஆண்டு நெருக்கடிமிக்க ஆண்டாகவே இருக்கும். இந்த நெருக்கடி நிலைமை வெகுசன போராட்டங்களுக்கு வழிவகுக்கலாம். இது ஒருபுறம் என்றால் மறுபுறும், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அழுத் தங்களும் அதிகரிக்கலாம். இது தொடர்பில், ஏற்கனவே நாம் சில விடயங்களை பதிவு செய்திருந்தோம். இந்த ஆண்டு மார்ச்சில் இடம் பெறவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் நகர்வுகள் சற்று மாறுபட்ட வகையிலும் அமைய வாய்ப்புண்டு. ஏனெனில், அமெரிக்கா மீண்டும், மனித உரிமைகள் பேரவையில் செல்வாக்குச் செலுத்தப் போகின்றது.

ஆட்சியாளர்களின் வெற்றியும் தோல்வியும் - அவர்கள் எதிர்பாராமல் ஏற்படும் நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதிலேயே தங்கியிருக்கின்றது. இந்த ஆண்டில் இடம்பெறும் விடயங்கள், இந்த அரசாங்கத்தின் எதிர்காலத்தின்மீது தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஒன்றில் நிலைமைகள் மேலும் மோச மடையலாம் - இல்லாவிட்டால், நிலைமைகளை சமாளிக்கக் கூடிய ஆற்றலை அரசாங்கம் பெறலாம்.

# இந்தியாவிடம் அரசியல் தீர்வை எதிர்பார்க்கும் தமிழ் தரப்பு

# பொருளாதார உதவியை எதிர்பார்க்கும் அரச தரப்பு!

அலசுவது இராஜதந்திரி

இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க கோரும் கூட்டு ஆவணத்தை தயாரிப்பதில் தற்போது தமிழ் பேசும் கட்சிகள் கவனம் செலுத்தி வருகின்றன.
இருந்தபோதிலும் தகுந்த வகையில் இந்த ஆவணத்தை தயாரிப்பதில் இழுபறியுடன்கூடிய தாமதம் நிலவுவதாகவே அறிய முடிகின்றது.

பெயரளில் கூட்டு ஆவணம் என்று குறிப்பிடப்பட்டாலும் எவ்வளவு தூரம் இந்த ஆவணம் ஓர் ஒத்திசைவான ஆவணமாக வெளிவரும் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது. இந்தப் புதிய ஆவணத்தை நோக்கும் போது இலங்கை விவகாரத்தில் இந்தி யாவின் மீள்பிரவேசத்தை வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பினர் கோருவதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கு - கிழுக்கு யுத்தம் முடிவுக்கு வந்த நாள் முதல் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் கோரி வருகின்றன. இதுதவிர, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தம் முடிவுற்றதும் நிகழ்த்திய உரைகளில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவலாக்கத்தை தான் மேற்கொள்ள தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும் அவர் தமது பதவிக்காலத்தில் 13ஆவது திருத்தச்சட் டத்தை அமுலாக்குவதற்கு பதிலாக 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைய டுத்து இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரித்து விடும் கைங்கரியத் தையே மேற்கொண்டிருந்தார்.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் கூடிய 13ஆவது திருத்தச்சட் டத்தை அமுலாக்குவதில் வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பு தோல்வியைத் தழுவியிருந்தது. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையின் உள்விவகாரங்களில் தனது 'மூக்கை நுழைப்பதற்கு' 13ஆவது திருத்தச் சட்டம் ஒரு பிடியாக இருப்பதையும் இந்தப் பிடியை உணர்ந்த நிலையிலேயே தற்போது வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பினர் தமிழ் பேசும் கட்சிகள் என்ற ரீதியில் முஸ்லிம் கட்சிகளை யும் இணைத்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான ஆவணத்தை தயாரிக்க முன்வந்துள்ளன.

இருந்தபோதிலும் இந்தக்கூட்டு ஆவணம் இறுதி வடிவத்தை பெற்றிருந்தாலும் அதன் வரைபில் மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டு ஆவணத்தை இந்திய பிரதமருக்கு அனுப்பிவைக்க உத்தேசித்துள்ள அதேசமயம், இக்கூட்டு ஆவணம் தொடர்பாக எட்டப் படும் எந்தவோர் ஒத்திசைவான போக்கும் எவ்வளவு தூரம் நீடித்து நிலைத்ததாக இருக்கும் என்பதே முக்கிய வினாவாக இருக்கின்றது.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் தத்தமது சொந்த அரசியல் நிலைப்பாடுகளை கொண்டிருக்கலாம். ஆனால், இந்த நிலைப்பாடுகளுக்கு அப்பால் சென்று



வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் அரசியல் தரப்பினர் என்ற வகையில் தென்னிலங்கையி லுள்ள வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினருக்கு ஆதரவாக இருக்கின்ற ஏனைய சிறுபான்மை இனக்கட்சிகளும் இப்புதிய கூட்டு ஆவணம் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

இதன்மூலமே இந்திய தரப்பினரின் குறிப் பாக இந்திய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்ப டுகின்ற புதிய கூட்டு ஆவணம் குறித்தும் சாத கமான ஒரு போக்கை எதிர்பார்க்க முடியும்.


இப்புதிய ஆவணம் தொடர்பில் கடந்த காலங்களில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது தொடர்டபாக முஸ்லிம் அர சியல் கட்சிகள் தமது நழுவல் போக்கை இத் தடவை வெளிப்படுத்தாது இருக்கவேண்டிய தும் அவசியமானதமாகின்றது.

இப்புதிய கூட்டு ஆவணத்தை தயாரித்து வருகின்ற தமிழ் பேசும் கட்சிகள் இத்தருணத் தில் தென்னிலங்கை அரசியல் நிலவரம் தொடர்பாகவும் விழிப்புடனிருக்க வேண்டி யதும் காலத்தின் தேவையாகின்றது. ஏனெ னில், தென்னிலங்கையில் ஆளும் கட்சிக்குள் ளேயே முறுகல் நிலை வலுவடைய ஆரம்பித் துள்ளது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடி யும் மறுபுறத்தே அரசியல் அரச தரப்பை ஆட்டம் காண வைத்துள்ளது.

வடக்கு - கிழக்கின் தமிழ்பேசும் அரசியல் தரப்பினர் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதற்கு இந்தியாவிடம் கோரவுள்ள நிலையில் அரச தரப்பினர் இந்தியாவிடம் பொருளாதார ரீதியாக நிதி உதவியைக் கோரி நிற்கின்றனர்.

எனவே, இலங்கை தொடர்பாக இந்தியா அரசியல் ரீதியாக மட்டுமல்ல. பொருளாதார ரீதியாகவும் தனது நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. ■

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 03 திங்கட்கிழமை**
**பிலவ வருடம் - மார்கழி - 19**
**நல்ல நேரம் : 6.00 - 7.30**
**ராகு காலம் : 7.30 - 9.00**
**திதி : பிரதமை**




**மேடம்**
முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். செலவுகள் குறையும். யாரை நம்புவது என்கிற குழப்பம் தீரும். மகிழ்ச்சியான நாள். பயனுள்ள புதிய விஷயம் ஒன்றை கற்றுக் கொள்வீர்கள்.

**இடபம்**
உங்களின் கவரும் தன்மை அதிகரிக்கும். பேச்சில் கவனம் தேவை. சகபணியாளர்களின் கேலிப் பேச்சுகளைப் பொருட்படுத்த வேண்டாம். நற்பெயர் கிடைக்கும். எதிலும் நிதானம் தேவை.

**மிதுனம்**
சாத்தியம் இல்லாத விஷயத்தை செய்து சாதனை படைப்பீர்கள். பணம் கொடுக்கல், வாங்கலில் பெரிய இலாபம் காண முடியும். பொருள் சேர்க்கை ஏற்படும். பங்குச் சந்தை லாபம் தரும்.

**கடகம்**
நல்லவர்கள் சிலரால் குடும்பத்திற்கு நன்மை கிடைக்கும். முதலீடு லாபம் தரும். சாப்பிடும் விஷயத்தில் கவனம் தேவை. நீண்ட நாளாக இருந்த பிரச்னை தீரும். நிம்மதி கூடும்.

**சிம்மம்**
கடந்த நாட்களை விட வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்து சென்று பலன் அடைவீர்கள். தெய்வீகப் பணிகளில் உங்களுக்கு நாட்டம் உண்டாகும்.

**கன்னி**
காலை நேரத்திற்கு பிறகு நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். மனதில் கருணை உருவாகி நல்ல செயல்களை செய்வீர்கள். உடல் ஆரோக்கியத்தில் சிறு தொந்தரவு வந்து நீங்கும்.

**துலாம்**
நட்பு வட்டம் விரிவடையும். சேமிப்பில் ஆர்வம் கூடும். உறவினர் ஒருவரின் ஆலோசனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். நெருங்கிய சொந்தங்களால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
வாழ்க்கைத்துணையுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். நண்பர்களை சந்திப்பீர்கள். பொதுப்பணியில் ஈடுபாடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் ஏற்பாடாகும். சுபச்செலவு வரும்.

**தனுசு**
யாரிடமும் கடுமையான சொற்களைப் பயன்படுத்தி விட வேண்டாம். பணியிடத்தில் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொள்வீர்கள். புதிய முயற்சிக்கான பலன் நிதானமாகக் கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்தில் வரவேற்கத்தக்க முன்னேற்றம் வரும். உறவினர், நண்பர்கள் மத்தியில் உங்களது கவுரவம் உயரும். புகழ் தரும் செயல்களைச் செய்ய முயலுங்கள்.

**கும்பம்**
எதிலுமே அவசரம் காட்டாமல் பொறுமையாக இருக்கவும். சோம்பல் காரணமாக முடிக்க வேண்டிய பணியில் தாமதம் வேண்டாம். பெருமையை அறிந்து சிலர் உங்களை நாடி வருவர்.

**மீனம்**
பிறருக்கு உதவி செய்வதால் உற்சாகம் அதிகரிக்கும். உங்களின் வாழ்க்கை தரம் உயரும். நட்பில் புரிதல் அதிகமாகும். திட்டம் ஒன்று நிறைவேறி உங்களை மகிழ்விக்கும். சுபச்செலவு உண்டு.

# தமிழகத்தில் டெல்டா, ஒமைக்ரோன் வைரஸ் இணைந்து 3 ஆவது அலையாகப் பரவுகிறது

## அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை, ஜன. 03

தமிழகத்தல் டெல்டா மற்றும் ஒமைக்ரோன் வைரஸ் இணைந்து 3 ஆம் அலையாக பரவுகிறது என்று தமிழக சுகாதார அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்

தமிழ்நாட்டில் ஒமைக்ரோன் வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது. கொரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கையம் அதிகரித்து வருகிறது. இதனால் தமிழகத்தில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சென்னை சைதாப்பேட்டையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது

"நாளை முதல் 15 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்க்ளுக்கு கொரோனா தடுப்பூசி போடப் படவுள்ளது. தடுப்பூசி போடும் பணியை நாளை முதலமைச்சர் தொடக்கி வைக்கிறார்.ஜனவரி 10 முதல் பூஸ்டர் தடுப் பூசி போடும் பணி தொடங்கப் படவுள்ளது.

2 ஆம் தவணை தடுப்பூசி செலுத்தி 9 மாதங்களுக்கு பிறகு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப் படவுள்ளது. முதற்கட்டமாக முன்களப்பணியாளர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப் படவுள்ளது. ஒமைக்ரோன் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 முதல் 4 நாட்களிலேயே எதிர் மறையாக வந்து விடுகிறது. தமிழகத்தல் டெல்டா மற்றும் ஒமைக்ரோன் வைரஸ் இணைந்து 3 ஆம் அலையாக பரவுகிறது - இவ்வாறு அவர் கூறினார்.

# பகையாளி விருந்தாளியானது எப்படி? தி.மு.கவிடம் கேள்வி எழுப்பும் சீமான்



சென்னை, ஜன. 03

பிரதமர் அதிகாரத்தில் அமர்ந்ததும் பிரதமர் மோடியின் வருகையை நாங்கள் எதிர்க்க மாட்டோம், அவர் எங்கள் பகையாளி அல்ல, விருந்தாளி என்கிறார்கள் தி. மு.க.வினர். பகையாளி விருந்தாளியானது எப்படி? என தி. மு.க. வை நோக்கி நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

"2022 ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி விருதுநகர், இராமநாதபுரம், திண்டுக்கல், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், நாகை, அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட புதிய மருத்துவக் கல்லூரிகள் திறப்பு விழா நடைபெற உள்ளது.

இதில் கலந்து கொண்டு கல்லூரிகளைத் திறந்துவைக்க பிரதமர் மோடி விமானம் மூலம் சென்னை வர இருக்கிறார். பிரதமர் வருகையையொட்டி தி.மு.கவை விமர்சித்து நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார் அதில்,

பிரதமர் அதிகாரத்தில் அமர்ந்ததும் பிரதமர் மோடியின் வருகையை நாங்கள் எதிர்க்க மாட்டோம், அவர் எங்கள் பகையாளி அல்ல, விருந்தாளி என்கிறார்கள். மம்தாவிற்கும், பினராயி விஜயனுக்கும் பகையாளியாக இருப்பவர் ஸ்டாலினுக்கு மட்டும் விருந்தாளி ஆனதெப்படி? என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

மேலும், பகையாளி என்பது விருந்தாளியானது போல, நாளைக்கு விருந்தாளி கூட்டாளியாகவும் மாறி, மக்களை ஏமாளியாக்கிக் கறுப்புக் கொடியைக் கீழே வீசிய கரங்கள், காவிக் கொடியைக் கையிலேந்தும் நாள் வெகு தொலைவில் இல்லை" என்று சீமான் பதிவிட்டுள்ளார்.

# தமிழகத்திற்கு 4 மருத்துவ கல்லூரிகளை மேலதிகமாக கேட்டுப் பெற வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்துகிறார்



சென்னை, ஜன. 03

தமிழ்நாட்டில் ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களில் மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய மருத்துவக் கல்லூரிகளை அமைக்க அனுமதி கோர வேண்டும் என தமிழக அரசுக்கு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களை அதிகரிப்பதற்காக நாடு முழுவதும் அறிவிக்கப் பட்ட 157 புதிய மருத்துவக் கல்லூரிகளில் கணிசமானவை இன்னும் அமைக்கப்படவில்லை என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. பல மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதில் நடைமுறை சிக்கல்கள் இருக்கும் நிலையில், அவற்றுக்கு மாற்று வழிகளை அரசு ஆராய வேண்டும்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்குவதில் உள்ள சிக்கல்கள் குறித்து நேர்காணல் அளித்த மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பாரதி பிரவீன் பவார், நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் 157 மருத்துவக் கல்லூரிகளை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது. ஆனால், சில மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி அமைக்க நிலம் இல்லாதது உள்ளிட்ட காரணங்களால் புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது தடைபட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படாத மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களின் பெயர்களை அமைச்சர் பாரதி தெரிவிக்கவில்லை என்றாலும் கூட, அறிவிக்கப்பட்ட கல்லூரிகளில் 55 மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இன்னும் தொடங்கப்படவில்லை என்று மத்திய சுகாதாரத்துறையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், பெரம்பலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய மாவட்டங்களில் இதுவரை மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படவில்லை. இவற்றில் ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களில் தனியார் மருத்துவக் கல்லூரிகளும் இல்லை என்பதால் அவற்றில் மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய மருத்துவக் கல்லூரிகளை அமைக்க அனுமதி கோரலாம் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# எரிவாயு கலவை மாற்றத்தின் பின்னணியில் அரசியல்வாதிகள்!

## முஜிபுர் ரஹ்மான் எம். பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன. 03**
**சமையல் எரிவாயு சிலிண்டர்கள்சார் வெடிப்பு சம்பவங்களின் பின்னால் அரசியல்வாதிகள் இருப்பதால்தான் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு காரணமாக இது வரை 7பேர் மரணமாகினர். பல பொருள் சேதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறு இருந்தும் அரசாங்கம் இதனுடன் சம்பந்தப்பட்ட யாரையும் கைது செய்யவும் இல்லை. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

இந்த சம்பவத்துக்கு பின்னால் அரசியல்வாதிகள் இருப்பதால்தான் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகின்றது. என்றாலும் அரசாங்கம் தற்போது அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்து வருகின்றது.

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் அரசாங்கத்தின் நிறு வனமாகும். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ்வின் அமைச்சுக்கு கீழேயே அது இயங்குகிறது. அதன் தற்போதைய தலைவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவராகும். இதற்கு முன்னர் இருந்த தலைவர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ்வால் நியமிக்கப்பட்டவர்.

அவர் தலைவர் பதவியில் இருந்து விலகிய பின்னர், சமையல் எரிவாயு சிலிண்டரின் இரசாயன கலவையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதை அவரே வெளிப்படுத்தி இருந்தார்.

அத்துடன், அந்த நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பாக தற்போதைய தலைவர் வெளிப்படுத்தி இருந்தார். ஆனால், இவை தொடர்பாக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நடவடிக்கையே தற்போது சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாகும். அதனால் இந்த பிரச்னைக்கு அதிகாரிகள்மீது மாத்திரம் பழியை சுமத்தி அரசாங்கத்துக்கு தப்பித்துக்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# புத்தாண்டு தினத்தில் வடக்கில் விபத்துக்களால் ஐவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 03

புத்தாண்டு தினத்தில் வடக்கின் மாவட்டங்களில் இடம்பெற்ற பல அசம்பாவித சம்பவங்களில் ஐவர் பலியாகினர்.

முல்லைத்தீவு - கேப்பாபிலவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார்.

பிலக்குடியிருப்பை கிருஷ்ணசாமி மாரிமுத்து (வயது 48), சூரியகுமார் கரிதாஸ் (வயது 17) ஆகியோர் உயிரிழந்தனர். சண்முகம் நிறோஜன் (வயது 23) என்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, காரைநகர் கசூரினா கடலில் நீராடிய கோண்டாவிலை சேர்ந்த யாழ். இந்துக் கல்லூரி மாணவனான 17 வயதுடைய யோகராசா யோகீசன் என்ற மாணவன உயிரிழந்தார்.

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டார். கார்த்தி (வயது 28) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் ஊடக நிறுவனம் ஒன்றின் ஹப் ரக வாகனம் ஒட்டோவை மோதியதில் ஓட்டோ சாரதியான ரஜீவன் (வயது 35) என்பவர் உயிரிழந்தார். (ஐ)

# 120,000 இலங்கையர்கள் 2021இல் வேலை தேடி வெளிநாடு சென்றனர்

கொழும்பு, ஜன. 03

2021 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில், கட்டாருக்கே அதிகளவானவர்கள் வேலை தேடி சென்றுள்ளனர். உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி கடந்த வருடம் சுமார் 30,000 இலங்கையர்கள் கட்டார் சென்றுள்ளனர். தவிர, 27,000 பேர் சவூதி அரேபியாவுக்கும், கிட்டத்தட்ட 20,000 பேர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் சென்றுள்ளனர்.

1,600 நபர்கள் சைப்ரஸுக்கும், 1,400 பேர் தென் கொரியாவிற்கும் வேலை தேடிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பரந்தன் கமக்கார அமைப்பின் நிதிமோசடி குறித்து ஆராய குழு!

## ஒரு வாரத்தில் அறிக்கை சமர்ப்பணம்

கிளிநொச்சி, ஜன. 03

கிளிநொச்சி - பெரியபரந்தன் கமக்கார அமைப்பின் நிதிமுறைகேடுகள் தொடர்பில் விவசாயிகளால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக, ஒரு வார காலத்துக்குள் கணக்காய்வுக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தேவரதன் தெரிவித்துள்ளார்.

பெரியபரந்தன் கமக்கார அமைப்பின் பொருளாளரால், சுமார் ஒரு கோடியே 3 இலட்சத்து 60 ஆயிரத்து 240 ரூபாய் நிதி, எந்தவித அனுமதியுமின்றி செலவிடப்பட்டுள்ளதாகவும் சுமார் நான்கு வருடங்களாக கணக்காய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை, என்றும் குறித்த அமைப்பால் பெருந்தொகை நிதி மோசடி செய்யப்பட்டதாகவும், பிரதேச விவசாயிகளால், கடந்த 28ஆம் திகதியன்று, மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வைத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து பதிலளித்த போதே, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க முடிவு!

கொழும்பு, ஜன. 03

தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவதுடன் புதிய மென்பொருள் மற்றும் குறியீட்டு எண்களை அறிமுகப்படுத்தவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பணி நிறைவடைந்ததும், முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கு மாத்திரமே பொது இடங்களில் அனுமதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் இந்த நடவடிக்கை நிறைவு செய்யப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# யாழில் கடையுடைத்து திருட்டு; வாழைச்சேனையில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 03

வாழைச்சேனையிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்கு வந்து அலைபேசி விற்பனை நிலையத்தை உடைத்து திருடியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அத்துடன், சந்தேக நபர் திருடிய அலைபேசிகளை விற்பனை செய்து கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் சத்திரச்சந்தியில் உள்ள அலைபேசி விற்பனை நிலையத்தில் கடந்த டிசெம்பர் 22ஆம் திகதி இரவு திருட்டு இடம்பெற்றது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விற்பனை நிலையத்தில் பெறப்பட்ட சி. சி. ரி. வி. பதிவுகளின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் நில்ரோக் தலைமையிலான குழுவினர் வாழைச்சேனைக்கு சென்று சந்தேகநபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர் திருடிய அலைபேசிகளை விற்பனை செய்து கொடுத்தனர் என்று குற்றச்சாட்டிலும் இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களிடமிருந்து 6 அலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டுள்ளனர். (ஐ- 3)



மட்டு. ஈழநாடு நாளிதழின் அறிமுக நிகழ்வு மட்டக்களப்பு சோட்டாக்கன் கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. புளியடிகுடா புனித செபஸ்தியார் தேவாலய பங்குத்தந்தை வண. ஜே. அனிஸ்டன் மொராயஸ், மட்டு. இந்துக்கல்லூரி முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. ரி. சரவணபவ குருக்கள், கராத்தே சங்கத்தின் பிரதான போதனாசிரியர் கே. ரி. பிரகாஸ் ஆகியோர் பிரதிகளை பெற்றனர்.



# கிளிநொச்சியில் தீ விபத்து; விற்பனை நிலையம் நாசம்!

கிளிநொச்சி, ஜன. 03

கிளிநொச்சி- சேவியர் கடைச் சந்திக்கு அருகாமையில் இயங்கி வந்த கட்டட பொருட்கள் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீயால் அந்தக் கடை முற்றாக எரிந்து நாசமானது.

நேற்று காலை 9.30 மணியளவிலேயே வர்த்தக நிலையம் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. எனினும் சிறிது நேரத்தில் அப்பகுதிக்கு கரைச்சி பிரதேச சபையின் தீ அணைப்பு பிரிவினர் தீயை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதும், பெரும்பகுதி எரிந்து நாசமானது.

மின்சார ஒழுக்குக் காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும், இந்தத் தீயால் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகின என்றும் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## விபத்தில் இளைஞன் மரணம்!

# நீதி கோரி ஏ-9 வீதியை மறித்து மக்கள் இரவுவேளை போராட்டம்!

வவுனியா, ஜன. 03

**வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மரணித்த இளைஞனுக்கு நீதி கேட்டு ஏ9 வீதியை மறித்து நேற்று முன்தினம் இரவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வவுனியா, ஏ- 9 வீதி தாண்டிக்குளத்தில் பிக்கப் ரக வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதியதில் வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ரஜீபன் (வயது 35) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். இந்த விபத்து நேற்று முன்தினம் 9.30 மணியளவில் இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான வாகனத்தை ஏற்றவிடாது முற்றுகையிட்டும், ஏ - 9 வீதியை மறித்தும் மரணித்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் இரவு 10 மணிக்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏ- 9 வீதியூடான போக்குவரத்து சுமார் இரண்டு மணி நேரம் பாதிக்கப்பட்டது.



நிலைமையை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாது போகவே, விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டனர். இதேநேரம் இராணுவத்தினரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். அங்கிருந்த வர்களை கலைந்து செல்லுமாறு எச்சரிக்கப்பட்ட நிலையில், படைத் தரப்பினருக்கும் அங்கிருந்த மக்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றி முறுகல் நிலை உருவானது.

இதைத் தொடர்ந்து விசேட அதிரடிப் படையினர் பலரை கைது செய்தனர். எனினும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் அவர்களை எச்சரிக்கையின் பின்னர் விடுவித்தனர்.

இதேவேளை, விபத்து நடந்த இடத்துக்கு வந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், மரணித்த இளைஞனுக்கு நீதி கிடைக்கும். சரியான முறையில் விசாரணை இடம்பெறும் என்று உயிரிழந்தவரின் தாயருக்கும் உறவினர்களுக்கும் வாக்குறுதி அளித்தார்.

இதைத் தொடர்ந்து இரவு 11.50 போராட்டம் கைவிடப்பட்டது. இதைத் தொடர்ந்து விபத்துக்குள்ளான வாகனங்கள் அங்கிருந்து பொலிஸாரால் அகற்றப்பட்டன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மீளக் கிடைத்த சந்தர்ப்பத்தை தலைவர்கள் நழுவவிடக்கூடாது!

## சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள்

வவுனியா, ஜன. 03

தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்பட்டுள்ள போதும் அவை நழுவவிட்டமை தான் கடந்தக்கால வரலாறாக உள்ள நிலையில் தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில் அதனை நழுவவிட்டுவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில்,

இலங்கை அரசாங்கம் தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. அதேநேரம், ஆட்சியாளர்களின் பங்காளிகளுடனும் அரசியல் ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சிங்கள - பௌத்த கோட்பாட்டின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 69 இலட்சம் தென்னிலங்கை மக்களே ஆட்சியாளர்களை திட்டித்தீர்க்கின்ற அளவுக்கு வெறுப்பைக்காறி உமிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்கள் இந்தியா, சீனா, அமெரிக்கா என்று தமக்காக திறக்கப்படும் என்ற நம்பிக்கையிலுள்ள அனைத்துக் கதவுகளையும் தட்ட ஆரம்பித்துள்ளார்கள். ஆனால், இலங்கையை மையப்படுத்தி ஏற்பட்டிருக்கும் பூகோளப்போட்டியின் பங்குதாரர்களான இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகியன தன்னலன்களை மையப்படுத்தி காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளன.

இதில் அமெரிக்கா, இந்தியாவை முன்னிலைப்படுத்திய நகர்வினை இலங்கை விடயத்தில் கையாள்கின்றது. அதே போன்றே ஏனைய மேற்குலக நாடுகளும் அவ்விதமான நகர்வையே பின்பற்றுகின்றது. இந்நிலையில் இந்தியாவிடமிருந்து இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான கடன்களை பெறுவதற்கு தயாராகியுள்ளது.

மறுபக்கத்தில் சீனாவிடத்திலும் கடன்களை, நன்கொடைகளை பெறுவதற்கு தயாராகி வருகின்றது. இந்தப் பின்னணியில், எதிர்வரும் எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் சீன வெளிவிவகாரங்களுக்கான அமைச்சர் வாங் யி இலங்கைக்கு வருகின்றார். அவர் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 65ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதையே பிரதான விடயமாக கொண்டிருக்கின்றார்.

அதேநேரம், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஒன்பதாம் திகதி இந்தியாவுக்குச் செல்வதற்கு தயாராக வருகின்றார். குஜராத்தில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்பது காரணமாக கூறப்பட்டாலும், பிரதமர் மோடியைச் சந்திப்பது, இந்தியாவிடமிருந்து பெறக்கூடிய டொலர்களை விரைவுபடுத்துவது என்பன அந்தப் பயணத்தின் பின்னணிகளாக உள்ளன.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளும், ஏனைய முஸ்லிம், மலையக கட்சிகளும்



இணைந்து தமிழ் பேசும் கட்சிகளாக பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள ஆவணத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது.

குறித்த ஆவணத்தை அனுப்புவதன் ஊடாக, இந்தியா - இலங்கை மீதான தனது பிடியை உறுதிப்படுத்தும் அதேநேரம், அதன் பயனாக ஆக்கக்குறைந்தது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையாவது முழுமையாக நடைமுறைப் படுத்த முடியும். அதிகாரப் பகிர்வுக்கான முதற்படியாக அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமானதாக இருக்கும்.

தற்போது ஏற்பட்டுள்ள பூகோள, பிராந்திய அரசியல், இராஜதந்திர மூலோபாயச் சூழலை உணர்ந்து கொள்ளாது வாய்ப்பை நழுவ விட்டால் தமிழினத்தின் எதிர்காலம் மேலும் மோசமடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன. எனவே, குறிப்பிறிந்து, தீர்க்கமான தீர்மானத்தை எடுக்கும் அதேநேரம், தொடர் தாமதங்களை தவிர்த்து மிகமிக விரைவாக கூட்டுஆவணத்தை ஏகோபித்து பிரதமர் மோடிக்கு அனுப்பி வைக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# கொரோனா தொற்றால் மன்னாரில் ஒருவர் பலி!

மன்னார், ஜன. 03

மன்னார் மாவட்டத்தில், நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழந்தார். இந்த வருடத்தில் தொற்றால் ஏற்பட்ட முதல் மரணம் இதுவாகும் என்று மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் நேற்று தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை வரை 35 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளன என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் மரணமானவர் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த 70 வயது நபர் ஆவார். இவர் கடந்த 30ஆம் திகதியன்று, மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றும் உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்றும் கூறினார். (ஐ)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 35 வேலைத் திட்டங்களில் 20இன் பணிகள் நிறைவு!

கிளிநொச்சி, ஜன. 03

கிளிநொச்சி மாவட்டத்தில், கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 35 வேலைத்திட்டங்கள், 8. 6 கோடி ரூபாய் செலவில், கடந்த ஆண்டில் முன் னெடுக்கப்பட்டுள்ளன என கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களில், கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில், 20 வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன என்றும் ஏனைய வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் மேற்படி திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


# இந்து ஆலய சிலைகள் உடைப்பு நுவரெலியாவில் பதற்ற நிலை!

## வர்த்தகர்கள் கடைகளை மூடி போராட்டம்!

**நுவரெலியா, ஜன. 03**

**நுவரெலியா - அக்கரப்பத்தனை நகரத்தில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விக்கிரங்கள் மற்றும் சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த பகுதியில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.**







நேற்று அதிகாலை குறித்த விக்கிரகங்கள் உடைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

அக்கரப்பத்தனை நகரத்தில் இந்து ஆலயங்கள் இல்லாத நிலையில், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மாதம் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளது. இந்த நிலையிலேயே அங்கு அமைக்கப்பட்ட சிலைகள் மற்றும் விக்கிரங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அக்கரப்பத்தனை நகர வர்த்தகர்களும் அனைத்து கடைகளையும் மூடி ஆலயத்துக்கு முன்பாக ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-கே)

# 5,906 வாகனங்கள் சோதிக்கப்பட்டன!

*கொழும்பு, ஜன. 03*

மேல் மாகாணத்தில், நேற்று முன்தினம் 5,906 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று, பொலிஸ் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் மக்களும் கண்காணிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக நேற்று முன்தினம், 793 பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 3 ஆயிரத்து 138 மோட்டார் சைக்கிள்களும் 2 ஆயிரத்து 768 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், 7 ஆயிரத்து 725 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 1,670 பேர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (கே)

# மருதமுனை பிரதேச மருத்துவமனையில் மக்களுக்கான சேவை மீளவும் ஆரம்பம்

*அக்கரைப்பற்று, ஜன. 03*

மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் பொது மக்களுக்கான சேவையை மீள ஆரம்பிக் கும் நடவடிக்கை நேற்று சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பு அதிகாரி மருத்துவர் ஏ. எல். எம். மிஹ்லார் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ. ஆர். எம். தௌபீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைத்தியசாலையை திறந்து வைத்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு டிசெம்பரில் கொரோனா தொற்று நாட்டில் அதிகரித் தமையால் சில மருத்துவமனைகள் கொரோனா தொற்றாளர் களை பராமரிக்கும் நிலையங்களாக மாற்றப்பட்டன. இதன் படி, மருதமுனை பிரதேச வைத்தியசாலையும் கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மத்திய நிலையமாக மாற்றப்பட்டது.

இந்நிலையில், தற்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் பெண் காயம்!

*நிந்தவூர், ஜன. 03*

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் - வெட்டுவாய்க்கால் காரைதீவு எல்லைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காய மடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு கல்முனை நோக்கி பயணித்த ஓட்டோவும் அக்கரைப்பற்றை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியே இவ் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நிந்தவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இரு வருடங்களில் ரூ. 100 கோடி வருமானம் ஈட்டியது மகாபொல!

*கொழும்பு, ஜன.03*

கடந்த இரண்டு வருடங்களில் மஹாபொல நிதியத்தை முதலீடு செய்ததில் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

இலங்கையில் நடைமுறையிலுள்ள புலமைப்பரிசில் திட்டங்களில் பெரும்திட்டமாக மகாபொல உள்ளது.

1981ஆம் ஆண்டு 4,000 பேருக்கு புலமைப்பரிசிலை வழங்கி மகாபொல புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போதைய நிலையில், இந்த புலமைப்பரிசிலை பெற்றுக்கொண்ட நிலையில் 60 ஆயிரம் பேர் இந்த பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று வருகின்றனர். அதுமட்டுமன்றி ஒவ்வொரு வருடமும் புதிதாக 11 ஆயிரம் பேருக்கு தலா 5,000 ரூபாய் என்ற அடிப்படையில் இந்தப் புலமைப்பரிசிலை வழங்கி வருகின்றோம்.

மகாபொல புலமைப்பரிசில் திட்டம் தொடர்பாக எமது தலைமையிலான குழுவினர் அண்மையில் கூடி ஆராய்ந்தோம். மனசாட்சிக்கு அமைவாகவும், நியாயமாகவும் தீர்மானங்களை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடினோம்.

அதன் பிரதிபலனாக மகாபொல நிதியொதுக்கீட்டை முதலீடு செய்ததில் 2020 ஆம் ஆண்டில் 108. 5 கோடி ரூபாயும் 2021 ஆம் ஆண்டில் 111. 5 கோடி ரூபாயும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனானர்களுக்கு கடந்த டிசெம்பர் மாதம் வரை அனைத்து கட்டணங்களுக்கு செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் மகாபொல நிதியத்தை முதலீடு செய்ததில் 100 கோடி ரூபாய் நிதி இலாபமாகக் கிடைத்துள்ளது. (கே)

# அட்டாளைச்சேனை ஆயுள்வேத மருத்துவமனையினர் உறுதிமொழி!



*அக்கரைப்பற்று, ஜன. 03*

2022 ஆம் ஆண்டின் கடமைச் செயல்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் எம். பி. எம். றஜீஸ் தலைமையில் இடம்பெற்றது.

2022ஆம் ஆண்டின் அரச சேவைக்கான கடமை செயல்பாடுகளை உறுதி செய்யும் உத்தியோகத்தர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இதன்போது, 2022ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார எதிர்பார்ப்புகளை அடைந்துகொள்ளும் பொருட்டு ஒருமித்த எண்ணத்துடன் அனைத்து அரசு ஊழியர்களும் செயல்படல் வேண்டும். அரச வளங்களை வினைத்திறன்மிக்கதாக முகாமைத்துவம் செய்து நிகழ்கால மற்றும் எதிர்கால பரம்பரையின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை அரச ஊழியர்கள் ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

சுபீட்சமான இலங்கையில் பயனுள்ள பிரஜைகளை, மகிழ்ச்சியான குடும்பங்களை, பண்பாடான ஒழுக்கரீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்காக அரச சேவையின் மகத்தான பங்களிப்பை அர்ப்பணிப்புடன் வழங்க வேண்டும் என சகல வைத்தியர்களும், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் உறுதிமொழி வழங்கினர். (ஐ)

ஈழநாடு





# தமிழர் முஸ்லிம் ஒற்றுமை செயல்வடிவு காணவேண்டும்

■ கலாநிதி அமீரலி

இலங்கையின் தமிழர் முஸ்லிம் வேற்றுமைக்கு ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகால வரலாறு உண்டு. அது தமிழரின் தலைமைத்துவத்தால் ஏற்பட்ட வேற்றுமை என்பதை மனக்கசப்புடன் இங்கே பதிவு செய்ய வேண்டியுள்ளது. அந்த வரலாற்றை இங்கே மீட்டல் செய்து ஒரு புதிய சர்ச்சையை உருவாக்குவது என் விருப்பமல்ல. ஆனாலும் பொது மேடைகளிலும் தமிழ் முஸ்லிம் தலைவர்களின் பேச்சுகளிலும் சதா உச்சரிக்கப்படும் ஓர் உவமை, அதுவும் கிழக்கு மாகாணச் சூழலில் உபயோகிக்கப்படுவது என்னவெனில் தமிழரும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் அங்கே நெருங்கி வாழ்கின்றனர் என்பதாகும். இந்த உவமையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் அன்றைய மட்டக்களப்பு பாராளுமன்ற அங்கத்தவர் இராசதுரை. மட்டக்களப்பு விளையாட்டு மைதானத்தில் தமிழரசுக் கட்சியின் கூட்டமொன்றில் அவர் பேசியதை நான் கேட்டு ரசித்தபோது எனக்குப் பாதின்ம வயது. அந்த உவமையின் யதார்தத்தை உணர்வதற்கு மூன்று தசாப்தங்களாவது சென்றன. அந்த யதார்த்தத்தை இங்கே விளங்குதல் அவசியம்.

பிட்டும் தேங்காய்ப்பூவும் என்று வருணிக்கும் போது அது குழல் பிட்டா வண்டுப் பிட்டா என்பதை எவரும் தெளிவுபடுத்துவதில்லை. குழல் பிட்டிலே மாவும் தேங்காயும் ஓரத்திலேதான் ஒட்டிக்கொண்டிருக்கும். ஆனால் வண்டுப்பிட்டில் அவை இரண்டறக்கலந்திருக்கும். கிழக்கிலே தமிழ் முஸ்லிம் கிராமங்கள் பிட்டும் தேங்காயும்போல் காணப்பட்டாலும் அம்மக்களின் இன உறவு ஓர் உறவாக இருந்ததேயன்றி ஆழ உறவாக வளர்க்கப்படவில்லை. அந்த ஓர உறவு பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்க்கப்பட்ட உறவு. அது குடும்ப உறவாகவோ உளங்கனிந்த நட்புறவாகவோ வளரவில்லை. உதாரணமாக, ஒரு தமிழருக்கு முஸ்லிம் கடையில் ஏதேனும் வாங்கவேண்டுமென்றால் அல்லது ஒரு முஸ்லிமுக்கு தமிழ் வைத்தியரின் சேவை தேவையென்றால் அந்தத் தேவைகள் இரு இனங்களையும் அத்தேவைகள் முடியும்வரை இணைத்தன. தேவை முடிந்தால் உறவும் முடிந்துவிடும்.

அதைவிட ஒரு முஸ்லிமின் விசேட வைபவங்களுக்குத் தமிழரையோ ஒரு தமிழனின் பண்டிகைக்கு முஸ்லிமையோ அழைத்தும் உபசரித்தும், இரு இனங்களும் கலந்த ஒரு விளையாட்டுக் கழகத்தையோ இசைக் குழுவையோ அல்லது மாதர் சங்கத்தையோ நிறுவியும் கலந்துறவாடுதல் மிகமிக அரிது. உதட்டளவிலே சிரித்துக்கொண்டு உள்ளத்திலே சந்தேகத்துடன் நடமாடிய இந்த இரு இனங்களும் இன்றாவது தாம் விட்ட தவறுகளை மறந்து ஒரு புதுப்பாதையில் அடியெடுத்து நடக்குமா? இதுதான் இன்றைய தலைமைகளை எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால்.

> **இரண்டு சிறுபான்மை இனங்களையும் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கி பெரும் பான்மை இனத்துக்குக் குற்றேவல் புரியும் இனங்களாக்குவதே பேரின வாதிகளின் ஒரே இலட்சியம்.**

இந்தியாவின் அழுத்தத்தால் கொண்டுவரப்பட்ட 13ஆம் அரசியல் யாப்புத் திருத்தப் பிரேரணையையும் அதன் அடிப்படையில் உருவாக்கப்படவேண்டிய வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபையையும் அதற்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்களையும் முற்றாக இல்லாமற் செய்வதற்கு ராஜபக்ச சிங்கள பௌத்த பேரினவாத அரசு சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறது. இந்தியாவின் மோடி அரசுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தியும் இந்திய முதலாளித்துவத்தின் முதலீடுகளுக்கு இலங்கையில் வாய்ப்புகளை வழங்கியும் மேற்குறிப்பிட்ட யாப்புத் திருத்தத்தின் தேவையை பேச்சளவுடன் மட்டும் இந்தியா நிறுத்திக்கொள்ளும் ஒரு தந்திரத்தை இலங்கை அரசு கையாள்கிறது.

இந்தத் தந்திரத்தின் ஓர் அங்கமாக இலங்கை முஸ்லிம் தலைமைகளின் உட்பூசல்களைப் பயன்படுத்தி முஸ்லிம் தமிழர் வேற்றுமையை விரிவாக்கி தமிழரின் கோரிக்கைக்கு முஸ்லிம்களின் ஆதரவை இல்லாமலாக்கும் உபாயத்தை ராஜபக்ஷ அரசு நாடுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாகவும் அதற் முன்னரும் முஸ்லிம்கள் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வன்முறைகளுக்கு ஆளாகி உயிர்களையும் உடைமைகளையும் இழந்து நின்றபோது கைகட்டிப் பார்த்து நின்ற ராஜபக்ச ஆட்சியாளர்கள் இப்போது வடக்கு கிழக்கு விடயத்தில் முஸ்லிம்களை நேசிப்பதன் நாடகம் என்னவோ?

இவ்வாறான ஒரு சூழலிலேதான் தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் தமிழுறவு அவசியம் என்று பேசத் தொடங்கியுள்ளன. ஆனால் அதே தலைமைகள் வடக்கிலே இருந்து துரத்தியடிக்கப்பட்ட முஸ்லிம்களை மீண்டும் வரவேற்று அவர்களை அங்கு குடியேற்றும் விடயத்தில் அசிரத்தை காட்டுவதேனோ? அது ஒரு துன்பியல் நிகழ்வு என்று சாதாரணமாகக் கூறிக்கொண்டு அதற்கான மாற்றீடுகளை மேற்கொள்ளாதிருப்பதை என்னவென்று சரிகாண்பது? அதேபோன்று கிழக்கிலே கல்முனைப் பிரதேச சபை இரண்டாகப் பிரிக்கப்படவேண்டுமென்ற சர்ச்சையிலும் முஸ்லிம்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் உறுதியான நிலைப்பாடொன்றை எடுக்காதிருப்பதும் ஏனோ? பேச்சிலே முஸ்லிம்களுடன் ஒற்றுமையாகும் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டு செயலிலே அதனை வெளிப்படுத்தாதிருப்பதை எவ்வாறு சரிகாணலாம்?

அதேநேரம் முஸ்லிம் தலைமைகளும் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் தமது இனம் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க எதிர்காலத்தில் நோக்கவிருக்கும் விளைவுகளைப்பற்றி அசிரத்தையாக இருந்துகொண்டு தமிழருடன் இணையாமல் தனித்து நின்று சமாளிக்கலாமென நினைப்பது மகா தவறு. இரண்டு சிறுபான்மை இனங்களையும் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி பெரும்பான்மை இனத்துக்குக் குற்றேவல் புரியும் இனங்களாக்குவதே பேரினவாதிகளின் ஒரே இலட்சியம்.

இன்றுள்ள முஸ்லிம் தலைமைகளோ வழமை போன்று யாருக்கு வால்பிடித்தால் தமக்குப் பதவியும் பணமும் கிட்டும் என்பதையே கொள்கையாகக் கொண்டு சமூகத்தையே விலைபேசத் தயாராக உள்ளன. இந்த வியாபார அரசியலால் முஸ்லிம்கள் ஓர் அடிமை இனமாக மாறுவதற்கு பாதை அமைக்கப்படுகின்றது. இந்த நிலையில் தமிழ் முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்து ஏதேனும் உருப்படியான ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியுமா என்பது சந்தேகம்.

அப்படியானால் இதற்கொரு மாற்று வழியுண்டா? நிச்சயம் உண்டு. அந்த வழி இரு இனங்களினதும் சிவில் அமைப்புகளிலிருந்து உருவாகவேண்டும். அது இரு சமூகங்களினதும் அடிமட்டத்திலிருந்து தோன்றவேண்டும். இன்றைய முஸ்லிம் சமூகத்தில் முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு கணிசமான அளவுக்கு ஆண்களும் பெண்களும் கலந்த ஒரு புத்திஜீவிகள் வர்க்கம் வளர்ந்துள்ளது. இந்த வர்க்கத்திடம் சமூக விழிப்பும் எதிர்காலம்பற்றிய சிந்தனையும் தமிழ்பற்றும் தியாக உணர்வும் மலர்ந்துள்ளதை உணர முடிகின்றது. தமிழரின் சிவில் அமைப்புகள் இந்த வர்க்கத்துடன் கைகோர்த்து இரு இனங்களையும் சமநிலையில் வைத்துத் தயாரிக்கப்பட்ட ஓர் உடன் பாட்டை அரசியல் தலைமைகளிடம் கையளித்து அதன் அடிப்படையில் 13ஆம் திருத்தத்துக்கான போராட்டத்தை வழிநடத்திச் செல்ல வேண்டும். இதனை காலங்கடந்த சிந்தனை என்று ஒதுக்கி விடா மல் இப்போதாவது அதற்கொரு சந்தர்ப்பத்தை வழங்கினாலென்ன? ■

# மக்கள்தொகை அதிகமுள்ள பகுதிகளில் சூறாவளிகள் இனி அதிகரிக்கும்!



■ மேட் மெக்ராத்

வெப்ப மண்டல சூறாவளிகள் ஏற்படக்கூடிய பகுதிகளின் பரப்பு காலநிலை மாற்றத்தால் விரிவடையும் என்று புதிய ஆய்வு கூறுகிறது. மேலும், அதனால் இலட்சக்கணக்கான மக்கள் இந்தப் பேரிடர்கள் உண்டாக்கப் போகும் புயல்களால் பாதிக்கப்படக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

தற்போது, புயல் அல்லது சூறாவளி என்றழைக்கப்படும் இந்தப் பேரிடர்கள், முதன்மையாக பூமத்திய ரேகைக்கு வடக்கு மற்றும் தெற்கே அமைந்திருக்கும் வெப்பமண்டலப் பகுதிகளில் மட்டுமே ஏற்படுகின்றன. ஆனால், அதிகரித்து வரும் வெப்பநிலையால், இந்த வானிலை நிகழ்வுகள் மத்திய அட்சரேகைகளிலும் உருவாகும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அத்தகைய பகுதிகளில் நியூயோர்க், பீஜிங், பாஸ்டன், ரோக்கியோ போன்ற நகரங்களும் அடக்கம்.

நேச்சர் ஜியோசயின்ஸ் (Nature Geoscience), என்ற ஆய்விதழில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், சூறாவளிகள் கடந்த 30 லட்சம் ஆண்டுகளாக இருப்பதைவிடப் அதிகமாக நிகழும் என்று அவர்களுடைய ஆய்வு முடிவுகள் தெரிவிப்பதாகக் கூறுகின்றனர்.

2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், துணை வெப்பமண்டல புயலான அல்ஃபா, போர்ச்சுகலில் நிலச்சரிவை ஏற்படுத்தியபோது, சூறாவளியால் ஒப்பீட்டளவில் ஏற்பட்ட சிறிய அளவிலான சேதங்களும் சில தலைப்புச் செய்திகளுக்கு வித்திட்டன.

ஆனால், விஞ்ஞானிகளுக்கு இது மிகவும் முக்கியமான நிகழ்வு.

யேல் பல்கலைக்கழகத்தின் இயற்பியலாளர் முனைவர்.ஜோச்வா ஸ்டுடோம், "இது போன்ற நிகழ்வை இதற்கு முன்பு நாங்கள் கவனிக்கவில்லை," என்று கூறுகிறார்.

"பாரம்பரிய அடிப்படையில், ஒரு வகை சிதைவோடு ஏற்பட்ட நடு- அட்சரேகை புயலாக இருந்தது. மேலும், அந்தச் சிதைவின்போது, வெப்பமண்டல சூறாவளி உருவாவதற்கான சரியான சூழ்நிலை உண்டானது. இது போர்ச்சுகலுக்கு இதற்கு முன்பு நடந்ததில்லை," என்றும் அவர் கூறினார்.

முனைவர் ஸ்டுடோம், வெப்பமடைந்து வரும் காலநிலை, உலகின் பெரும்பான்மை மக்கள் வசிக்கும் பெருமளவிலான பொருளாதார நடவடிக்கைகள் நிகழும், மத்திய அட்சரேகையில் இந்த வகையான புயல்களை அதிகமாக உருவாக்குவதை காணமுடியும், என்று கூறுகின்ற இந்த ஆராய்ச்சியின் முதன்மை ஆசிரியர்.

புவி வெப்பமடையும்போது, பூமத்திய ரேகை மற்றும் துருவப் பகுதிகளுக்கு இடையிலான வெப்பநிலையில் இருக்கும் வேறுபாடு குறையும். மேலும், இது, வேகமான காற்றோட்டத்தையும் (Jet Stream) பாதிக்கும் என்று அவர் விளக்கினார்.

பொதுவாக, இத்தகைய உயரமான காற்றோட்டம் சூறாவளிகளை பூமத்திய ரேகைக்கு நெருக்கமாகவே வைத்திருக்கும், ஒரு வகை எல்லைக் காவலாகச் செயல்படுகின்றன.

"காலநிலை வெப்பமடையும்போது, மத்திய அட்சரேகையில் நடக்கும் வேகமான காற்றோட்ட செயல்பாடு பலவீனமடையும் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளின்போது பிளவுபடவும் கூடும். இது இந்த மாதிரியான சூறாவளி உருவாவதற்கு வழிவகுக்கிறது."

சூறாவளிகளின் மீதான, மனிதத் தூண்டுதலின் விளைவாக உண்டான காலநிலை மாற்றத்தின் தாக்கம் பற்றிய கேள்வி கடந்த காலங்களில் சர்ச்சைக்குரியதாக இருந்தது. ஆனால், சமீபத்திய ஆராய்ச்சிகளின், இரண்டுக்குமான தொடர்பு தெளிவாகி வருகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம், காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையிலான குழு, வெப்பமடைந்துவரும் காலநிலையின் அறிவியல் குறித்த அதன் 6ஆவது மதிப்பீட்டு அறிக்கையின் முதல் பகுதியை வெளியிட்டது.

அதன் ஆசிரியர்கள், சூறாவளி மற்றும் வெப்பமண்டல புயல்களைப் பொறுத்தவரை, மனிதத் தூண்டுதல்களால் வலுப்பெற்றுள்ளது என்பதில் "அதிக நம்பிக்கை," இருப்பதாகக் கூறியுள்ளனர்.

"தீவிர வெப்பமண்டல சூறாவளிகளின் விகிதம், வெப்பமண்டல புயல் காற்றின் உச்சகட்ட வேகம் மற்றும் மிகவும் தீவிரமான வெப்பமண்டல புயல் காற்றின் உச்சகட்ட வேகம், புவி வெப்பமடைதல் அதிகரிப்பதோடு உலகளவில் அதிகரிக்கும்," என்று ஐ.பி.சி.சி கூறியது.

புதன்கிழமை வெளியிடப்பட்ட புதிய ஆராய்ச்சி, எதிர்காலத்தில் வெப்பமண்டல புயல்கள் முன்பு நினைத்ததைவிடப் பரந்த அளவில் அதிகமாக நிகழக்கூடும் என்பதைக் காட்ட பல ஆதாரங்களைப் பயன்படுத்துகிறது.

"நாங்கள் செய்திருப்பது, உலகளவில் புயல்களுக்குள் நடக்கும் இயற்பியலுக்கும் வளிமண்டலத்தின் இயக்கவியலுக்கும் இடையிலான தொடர்பைத் தெளிவாக்குவது தான்" என்று கூறினார் முனைவர் ஸ்டுடோம்.

"இதுவொரு கடினமான பிரச்னை. ஏனெனில், இந்த இயற்பியல் நவீன கணினிகளில் இயங்கும் எண் மாதிரிகளில் சரியாக உருவகப்படுத்தப்படவில்லை."

இந்தப் புயல்களின் விரிவாக்கம், குறிப்பாக வெப்பமயமாதலின் பிற தாக்கங்களின்போது, உலகத்திற்குக் குறிப்பிடத்தக்க அபாயத்தை ஏற்படுத்துகிறது.

> **"சூறாவளிகளின் மீதான, மனிதத் தூண்டுதலின் விளைவாக உண்டான காலநிலை மாற்றத்தின் தாக்கம் பற்றிய கேள்வி கடந்த காலங்களில் சர்ச்சைக்குரியதாக இருந்தது. ஆனால், சமீபத்திய ஆராய்ச்சிகளின், இரண்டுக்குமான தொடர்பு தெளிவாகி வருகிறது.**

"மத்திய அட்சரேகையில் உள்ள வெப்பமண்டல புயல்கள், மெதுவான இயக்கம் மற்றும் அதிக மழைப்பொழிவு போன்ற இதர மாற்றங்களையும் எதிர்கொள்ளலாம்," என்று முன்னர் ப்ரின்ஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தில் வளிமண்டல விஞ்ஞானியாக இருந்த முனைவர் கான் ஸாங் கூறினார்.

"இந்த வெப்பமண்டல புயலின் மாற்றங்கள் மற்றும் கடலோரத்தில் ஏற்படும் கடல்மட்ட உயர்வு ஆகியவை குறிப்பிடத்தக்க சமூக பாதிப்புகளையும் அதிகரிக்கலாம்," என்றும் முனைவர் ஸாங் கூறினார்.

வெப்பமயமாதலின் தாக்கத்திற்கான உணர்திறன், வெப்பமண்டல சூறாவளிகளில் அதிகளவிலான நிச்சயமற்ற தன்மையைக் கொண்டுள்ளது என்று முனைவர். ஸாங் எச்சரித்தார். அதேநேரத்தில், இந்தப் புயல்களினால் ஏற்படக்கூடிய அபாயம், வெப்பமய மாதலோடு சேர்ந்து அதிகரிக்கக்கூடும் என்றும் கூறினார்.

நிச்சயமாக, இந்த நிலை இப்படியே இருக்கப்போவதில்லை என்றும் குறிப்பாக அடுத்த பத்தாண்டுகளில் கரிம உமிழ்வு வியக்கத்தக்க அளவில் குறைக்கப்பட்டால், இந்த விளைவுகளை மாற்றக்கூடும் என்றும் ஆசிரியர்கள் வாதிடுகின்றனர்.

"இந்த மீதான கட்டுப்பாடு வெப்பமண்டலங்களுக்கும் துருவப் பகுதிகளுக்கும் இடையிலான வெப்பநிலையைப் பொறுத்தது. மேலும், அது ஒட்டுமொத்த காலநிலை மாற்றத்தோடு மிகவும் நெருக்கமாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது," என்று முனைவர் ஸ்டுடோம் கூறினார்.

"இந்த நூற்றாண்டின் இறுதியில், அதிகமான கரிம உமிழ்வு சூழ்நிலைக்கும் குறைவான கரிம உமிழ்வு சூழ்நிலைக்கும் இடையே இருக்கும் வியக்கத்தக்க அளவிலான வேறுபாடு இருக்கும். அது, சூறாவளி எப்படி ஏற்படுகிறது என்பதில் மிகவும் குறிப்பிடத்தக்க வகையிலும் அந்த வேறுபாடு அமையும்." ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

✧ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

**01)** "இவன், வகுப்பாசிரியரைப் போலச் சட்டம் பேசுகிறான். ஒழுங்கு என்கிறான்...... அத்துடன் பொருள்களை உரிய இடத்தில் வைக்க வேண்டும்; பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்கிறான். அது மட்டுமன்று, எல்லா மாணவர்களும் சத்தியனிடமே அன்பாகவும் நேசமாகவும் இருக்கிறார்கள். அவனுக்குத் தனி மரியாதையே கொடுக்கிறார்கள்" எனத் தன் எரிச்சலை ஆதவன் ஏனைய மாணவர்களிடமும் வெளிப்படுத்தினான். ஆனாலும் மாணவர்கள் பலர் சத்தியனுக்கு ஆதரவாகவே பேசினார்கள்.

✧ **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

i. அநாதரவு என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.

.......................................................................................................

ii. இரட்டைக்கொம்பும், அரவும், கீழ்க்காலும் கொண்ட சொல்லை எழுதுக.

.......................................................................................................

iii. இப்பந்தியில் காணப்படும் ஒத்தகருத்துச் சோடிச் சொற்களை எழுதுக.

.......................................................................................................

iv. உயர்திணை ஒருமை நிகழ்கால வினைச்சொல்லை எழுதுக.

.......................................................................................................

v. "வகுப்பாசிரியரை" இச்சொல்லைப் பிரித்து எழுதுக.

.......................................................................................................

vi. இப் பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.

.......................................................................................................

vii. குணப்பெயர் ஒன்றை எழுதுக.

.......................................................................................................

viii. பலர்பாற் பெயர்ச் சொல்லை எழுதுக.

.......................................................................................................

(8 x 1 = 08 புள்ளிகள்)

**02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

i. காடுகளை ....................ப்பதினால் சுற்றுச்சூழல் பாதிப்படைகின்றது. (அலி, அளி, அழி)

ii. ................................ உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் இன்று பணக்காரனாக இருக்கின்றான். (ஊன், ஊண்)

iii. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ................. காரியம் ஆகும். (அரிய, அறிய)

(3 x 1 = 03 புள்ளிகள்)

**03) பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.**

i. ஏட்டிக்குப் போட்டி - .......................................................................

ii. கடன் கழித்தல் - .......................................................................

(2 x 1 = 02 புள்ளிகள்)

**04) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

i. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன். ...............................................

ii. எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா. ...............................................

iii. வழக்கைத் தாக்கல் செய்பவன். ...............................................

(3 x 1 = 03 புள்ளிகள்)

**05) பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.**

i. Plan.......ain ii. Ma.......ket

(2 x 1= 02 புள்ளிகள்)

**06) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

i. Please open your book :- ...............................................

ii. I am watering the plants :- ...............................................

(2 x 1= 02 புள்ளிகள்)

**07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

நான் பாட வேண்டும்.

.......................................................................................................

(02 புள்ளிகள்)

**08) பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i. புகையிரத நிலையம் :- ...............................................

ii. மயில் :- ...............................................

(2 x 1 = 02 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. சத்து வத்த(ட்)ட யமு(Dh)த?

.......................................................................................................

ii. உட பனின்ன

.......................................................................................................

(2 x 1 = 02 புள்ளிகள்)

## விடைகள்

01. i) ஆதரவு ii) பேசுகிறான் / நேசமாகவும் iii) அன்பாகவும் - நேசமாகவும் / அன்பு - நேசம்
iv) பேசுகிறான் / சொல்கிறான் v) வகுப்பு + ஆசிரியரை vi) வகுப்பாசிரியர்
vii) அன்பு / நேசம் / ஒழுங்கு / மரியாதை viii) மாணவர்கள் / மாணவர்களும் / பலர் (08 புள்ளிகள்)
02. i) அழி ii) ஊண் iii) அரிய (03 புள்ளிகள்)
03. i) விதண்டாவாதம் ii) மனமின்றிச் செய்தல் (02 புள்ளிகள்)
04. i) வேட்பாளன் ii) பவள விழா iii) வாதி (03 புள்ளிகள்)
05. i) t ii) r (02 புள்ளிகள்)
06. i) தயவு செய்து உங்கள் புத்தகத்தைத் திறவுங்கள்.
ii) நான் தாவரங்களுக்கு நீர் ஊற்றுகின்றேன் / ஊற்றிக் கொண்டிருக்கின்றேன். (02 புள்ளிகள்)
07. I want to sing. (02 புள்ளிகள்)
08. i) தும்றிய ஸ்தானய ii) மொணரா (02 புள்ளிகள்)
09. i) மிருகக் காட்சிச் சாலைக்குப் போவோமா? ii) துள்ளிப் பாயுங்கள். (02 புள்ளிகள்)

# இனி எந்தப் பதவியையும் வகிக்கமாட்டேன்!



## புத்தகம் எழுதத் தீர்மானம் என்கிறார் பி.பீ. ஜயசுந்தர

கொழும்பு, ஜன. 03

"ஜனாதிபதி செயலாளர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், அரச நிர்வாகத்தில் வேறு எந்த பதவியையும் வகிக்க மாட்டேன்."

- இவ்வாறு ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தர தெரிவித்தார். ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, அப்பதவியில் இருந்து இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

இந்நிலையில் அவருக்கு அரச ஆலோசகர் அல்லது நிதி அமைச்சின் ஆலோசகர் பதவி வழங்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறானதொரு பின்பலத்திலேயே, இனி எந்தப் பதவியையும் வகிக்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

"சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய ஜனாதிபதிகளின் கீழ் நான் முக்கிய பதவிகளை வகித்துள்ளேன். எனவே, ஓய்வுபெற்ற பின்னர் புத்தகமொன்றை எழுதவுள்ளேன்" எனவும் பி.பீ. ஜயசுந்தர மேலும் தெரிவித்தார். (இ)

# பிரதமர் பதவியில் இருந்து நான் ஓய்வுபெறமாட்டேன்!

## மஹிந்த அறிவிப்பு



கொழும்பு, ஜன. 03

**"பிரதமர் பதவியில் இருந்து நான் ஓய்வுபெறமாட்டேன். அதற்கான தேவைப்பாடு தற்போது எழவில்லை."**

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ ஓய்வு பெறுவார் எனவும், புதிய பிரதமராக ராஜபக்ஷ குடும்பத்தில் உள்ள ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இது தொடர்பில் சிங்கள வார இதழொன்று பிரதமரிடம் வினவியுள்ளது.

அதற்குப் பதிலளித்துள்ள அவர், பிரதமர் பதவியில் தான் நீடிப்பார் எனக் குறிப்பிட்டுள்ளார். "நாட்டில் கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. அதனைப் பயன்படுத்தி சிலர் அரசுக்கு எதிராகக் கருத்துகளைப் பரப்பி வருகின்றனர். எனினும், அறிவுள்ள மக்கள் இதனை நம்பமாட்டார்கள்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## 9 பேர் கைது!

கொழும்பு, ஜன. 03

பெல்வத்த சீனி நிறுவனத்தின் களஞ்சியசாலைக்குள் பிரவேசித்து உர மூடைகளை வலுக்கட்டாயமாக ஏற்றிச்சென்ற 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், நேற்றுமுன்தினம் களஞ்சியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தரை மிரட்டி, சந்தேகநபர்கள் ஏறக்குறைய 60 உர மூடைகளை ஏற்றிச் சென்றுள்ளனர்.

உர மூடைகளை ஏற்றிச்செல்லப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் ரக வாகனமும், ஓட்டோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (இ)

# மக்களின் நன்மை அறிந்து ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்

## சுதந்திரக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 03

"அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு சர்வ பலமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மக்களின் நன்மைக்காக அவர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்."

- இவ்வாறு அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியதாவது:-

"நாம் மக்களின் தேவையறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட்டால், மக்கள் எமக்கு எதிராக 'ஹூ' சத்தம் எழுப்பமாட்டார்கள்.

நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயுவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் அரசு மீது அதிருப்தியில் உள்ளனர். மறுபுறத்தில் எரிவாயு சார் வெடிப்பும் இடம்பெறுகின்றது.

இவற்றுக்குத் தீர்வு வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அர



சமைப்பின் 20 ஊடாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவர் பயன்படுத்த வேண்டும்" - என்றார். (இ)

# விடுபட்ட பாடங்களை பூர்த்தி செய்ய திட்டம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 03

மாணவர்கள் புதிய வகுப்புகளுக்கு உயர்த்தப்பட்டுள்ள போதிலும், கடந்த தரங்களில் விடுபட்ட பாடங்களையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வித்துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடத்திட்டங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இது முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

2022ஆம் ஆண்டின் முதலாம் தவணை இன்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஜனவரியில் வெப்ப நிலையில் மாற்றம்

கொழும்பு, ஜன. 03

நாட்டில் மன்னார், அம்பாறை, கொழும்பு, கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்த மாதத்தின் இரவு வேளைகளில் வழமையாக நிலவும் வெப்பத்தை விடவும் அதிக வெப்பம் பதிவாகக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் சில மாவட்டங்களில் வழமையான வெப்பநிலை மேலும் வீழ்ச்சியடையக்கூடும்.

குறிப்பாக புத்தளம், மன்னார், அநுராதபுரம், கொழும்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பகல் வேளையில் நிலவும் வழமையான வெப்பநிலையின் அளவு வீழ்ச்சியடைகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குருநாகல், கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களும் அதில் உள்ளடங்குகின்றன.

அத்துடன் இந்த மாதம் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அதிக மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

# இன்று முதல் அரச சேவைகள் மீள ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 03

நாட்டில் இன்று முதல் வழமை போன்று அரச பொதுச் சேவைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுச்சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்காக அரசால் பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், விவசாயம், கைத்தொழில் மற்றும் வாழ்



வாதார மேம்பாடு உள்ளிட்ட துறைகளின் முன்னேற்றங்களுக்கு அவற்றை உரிய முறையில் நிர்வகிக்க வேண்டும் எனவும் அரச சேவைகள் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று முதல் அரச ஊழியர்கள் வழமை போன்று பணிக்கு அழைக்கப்படுவார்கள்.

இன்று காலை தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டு, அரச சேவை பிரமாணம் செய்து, கடமைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கொரோனா பரவல் காரணமாக, பல சந்தர்ப்பங்களில் அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் அத்தியாவசிய ஊழியர்கள் மட்டுமே கடமைக்கு அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)



ஐக்கிய அரபு இராச்சியத்தில் புத்தாண்டை வரவேற்க நடத்தப்பட்ட வாண வேடிக்கை 5 கின்னஸ் சாதனைகளை படைத்தது. அதில் ஒரு காட்சியே இந்த ஒளிப்படங்கள்.

# ‘ப்ளோரோனா’ இரட்டை திரிபு; இஸ்ரேலில் கண்டறியப்பட்டது!

டெல்அவிவ், ஜன. 03

**ஒமைக்ரோன் மாறுபாட்டின் அச்சத்திற்கு மத்தியில், இஸ்ரேல் முதல் ‘ப்ளோரோனா’ நோய் தொற்றை பதிவு செய்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**

கொரோனா வைரஸில் தொடங்கி அல்பா, பீட்டா, காமா, டெல்டா, ஒமைக்ரோன், டெல்மைக்ரோன் என வைரஸ் உருமாற்றம் அடைந்து வருகிறது.

உலக அளவில் ஒமைக்ரோன் வைரஸ் தற்போது வேகமாகப் பரவி அச்சுறுத்தி வரும் நிலையில் அடுத்த வைரஸ் இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது இரட்டை உருமாற்ற வைரஸான இதில், இன்புஷ்ளுவன்ஸா வைரஸூம், கொரோனா வைரஸூம் சேர்ந்து உள்ளன. இதனால், இதற்கு ப்ளோரோனா வைரஸ் என்று ஆய்வாளர்கள் பெயர் வைத்துள்ளனர் என்று அரேபிய நியூஸ் தெரிவித்துள்ளது.

டெல் அவைவ் நகரில் உள்ள ரொபின் மருத்துவ மையத்துக்கு பிரசவத்துக்காக சென்ற பெண் ஒரு வருக்கு நடத்தப்பட்ட பரிசோதனை யிலேயே இந்த வைரஸ் திரிபு கண் டறியப்பட்டுள்ளது. அந்த கர்ப்பவதி பெண் இன்னும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்று இஸ்ரேல் நாளேடான யேதியோத் அஹ் ரோநோத் தெரிவித்துள்ளது. (ஐ)

## ரொனி பிளேயருக்கு ‘சேர்’ பட்டம் அளிப்பு



லண்டன், ஜன. 03

பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயருக்கு ‘சேர்’ பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பி. ரி. ஐ செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில்,

ரொனி பிளேயருக்கு பிரிட்டன் மகாராணி எலிசபெத் மாவீரர் விருது வழங்கியுள்ளார். ‘ஓர்டர் ஒவ் கார்ட்டர்’ உறுப்பினராக ரொனி பிளேயரை அரசி எலிசபெத் நியமித்துள்ளார்.

பிரிட்டனின் மிகப் பழையதும் முதன்மையானதுமான இந்த விருது, 1348ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சிறந்த சமுதாய சேவை ஆற்றியவர்களுக்கு இந்த விருது வழங்கப் பட்டு வருகிறது.

இந்த விருதைப் பெற்றதன் மூலம் ரொனி பிளேயர், இனி ‘சேர் ரொனி பிளேயர்’ என்று சனிக்கிழமை முதல் அழைக்கப்படுவார் என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## புத்தாண்டு வழிபாட்டில் நெரிசல் இந்தியாவில் 12 பேர் உயிரிழப்பு!



ஸ்ரீநகர், ஜன. 03

இந்தியாவில் இந்து ஆலயம் ஒன்றில் புத்தாண்டு வழிபாட்டுக்காக மக்கள் கூடியபோது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

காஷ்மீரிலுள்ள மாதா வைஷ்ணோ தேவி ஆலயத்தில் சனிக்கிழமை புத்தாண்டு வழிபாட்டுக்காக மக்கள் கூடினர். இதன்போது பக்தர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் இந்த நெரிசல் தோன்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கமாக இந்த ஆலயத்தை வழிபட தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். விடுமுறை காலத்தில் இங்கு வருபவர்களின் எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்திருக்கும்.

இந்தியாவின் மிகவும் புனித திருத்தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் இந்த குகைக் கோயிலில் புத்தாண்டு வழிபாட்டுக்காக ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்தனர்.

தொற்றுநோய் அபாயத்தால் அங்கு கூடுவோரின் எண்ணிக்கை 25 ஆயிரமாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஆனால், நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட அளவை விட பக்தர்கள் கூடினர். இதன்போது இரு கூட்டத்தாரிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தால் தள்ளுப்பாடு ஏற்படவே இந்த நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர். (ஐ)

## கருணைக் கொலைக்கு ஆஸ்திரியாவில் அனுமதி!

வியன்னா, ஜன. 03

கடுமையான நோய்வாய்ப்பட்டு இயலாத நிலையில் உள்ளவர்களை அவர்களின் சுயவிருப்பின் பேரில் கருணைக் கொலைக்கு அனுமதிக்கும் சட்டம் ஆஸ்திரியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது.

தீவிர நோய்வாய்ப்பட்ட அல்லது நிரந்தர பலவீனமான நிலையிலுள்ள வயோதிபர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் கருணை கொலை செய்ய இதன் மூலம் வழி ஏற்பட்டுள்ளது.

இறுக்கமான நடைமுறைகளின் கீழ் ஒருவர் உயிரை மாய்த்துக் கொள்ளும் நடைமுறை ஒழுங்குபடுத்தப் படும். உயிரை மாய்த்துக்கொள்ள செய்யப்படும் விண்ணப்பங்கள் இரண்டு மருத்துவர்களால் மதிப்பிடப் படும். அந்த இரு மருத்துவர்களில் ஒருவர் நோய் தடுப்பு மருந்து நிபுணராக இருக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்வாழ்வதற்கான வாய்ப்புள்ள ஒருவர் தன்னை கருணைக் கொலை செய்ய விண்ணப்பம் செய்தால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, அவருக்கான குணமாக்கல் சிகிக்கைகளுக்கான நிதி உதவிகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

எனினும், புதிய விதிகள் மூலம் சிறார்களோ அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவர்களோ தற்கொலை செய்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்பும் ஒருவர் மீள முடியாத நோய் நிலையால் அவதிப்படுபவர் என்பது மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களால் சுயமாக முடிவெடுக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இரண்டு மருத்துவர்களிடம் இருந்து ஒப்புதல் பெற்ற பின்னர் தங்கள் முடிவு குறித்து சிந்திக்க நோயாளிகளுக்கு 12 வாரங்கள் அவகாசம் வழங்கப்படும்.

இந்த காத்திருப்பு காலத்திற்குப் பிறகும் அவர்கள் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தால் உரிய மருந்துகளின் உதவியுடன் கருணைக்கொலை செய்ய முடியும்.

துஷ்பிரயோகத்தை தடுக்க இந்த மருந்துகளை விற்கும் மருந்தகங்களின் பெயர்கள் வழக்கறிஞர்கள் மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமே அறிவிக்கப் படும். அவை பொதுவில் விளம்பரப்படுத்தப்படாது எனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தென்னாபிரிக்க பாராளுமன்ற கட்டடத்தில் பெரும் தீ விபத்து!

கேப்டவுன், ஜன. 03

தென்னாபிரிக்காவின் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

தலைநகர் கேப்டவுனில் - உள்ளூர் நேரப்படி காலை 7.30 மணியளவில் இந்தத் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் பெரிய தீப்பிழம்புகள் மற்றும் பெரும் புகை மூட்டம் வான் நோக்கி எழுந்ததுடன், தீ பரவலை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்களும் விரைந்து செயல்பட்டனர்.

கடந்த வாரம் மறைந்த பேராயர் தஸ்மன் டுட்டுவின் இறுதி ஊர்வலம் பாராளுமன்றின் அருகே இடம்பெற்ற சில மணி நேரங்கள் கழித்து இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பாதிப்படைந்தோர் விவரங்களும் உடனடியாகத் தெரிய வரவில்லை.

தீ மூன்றாவது மாடி அலுவலகங்களில் தொடங்கி தேசிய சட்டமன்ற அறைக்கும் பரவியது என்று உள்ளூர் தீயணைப்பு சேவை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். (ஐ)






# தென்னாபிரிக்காவுடனான தொடர் இந்திய ஒருநாள் அணி அறிவிப்பு!

*புதுடில்லி, ஜன. 03*

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடும் இந்திய அணியின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், அந்த அணியின் தலைவரான ரோஹித் சர்மா இடம்பெறவில்லை. அவருக்கு பதிலாக கே. எல். ராகுல் அணித் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ரோஹித் சர்மா காயம் காரணமாக விளையாட முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், சகலதுறை வீரர்களான அக்ஸர் பட்டேல், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் உடற்தகுதியில்லாததால் சேர்க்கப்படவில்லை. டெஸ்ட் தொடரில் சிறப்பாகப் பந்துவீசி வரும் முகமது ஷமிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டுக்குப்பின் மீண்டும் ஒருநாள் தொடரில் விளையாட அஸ்வின் அழைக்கப்பட்டுள்ளார்.

கே. எல். ராகுல் (அணித் தலைவர்) ஜஸ்பிரித் பும்ரா (உப தலைவர்), ஷிகர் தவான், ருதுராஜ் கெய்க்வாட், விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், ஸ்ரேயாஸ் ஐயர், வெங்கடேஷ் ஐயர், ரிஷப் பந்த், இஷான் கிஷன், யஜூவேந்திர சாஹல், ரவிச்சந்திரன் அஸ்வின், வாஷிங்டன் சுந்தர், புவனேஷ்வர் குமார், தீபக் சாஹர், பிரசித் கிருஷ்ணா, ஷர்துல் தாக்கூர், முகமது சிராஜ் (ஐ)





# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் பங்களாதேஷ் நிதான ஆட்டம்!

*மௌன்கானியு, ஜன. 03*

பங்களாதேஷூக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் நியூசிலாந்து அணி 328 ஓட்டங்களை குவித்துள்ளது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடி வரும் பங்களாதேஷ் அணி நிதானமாக ஆடுகின்றது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவின்போது 175 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்துள்ளது அந்த அணி.

நியூசிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி சனிக்கிழமை பே ஓவல் மைதானத்தில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, முதல் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 258 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹென்றி நிகோல்ஸ் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. பின்வரிசை வீரர்கள் பங்களாதேஷின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் வேகமாக ஆட்டமிழந்தனர். நிகோலஸ் மட்டும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இதனால், நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் 300 ஓட்டங்களை தாண்டியது.

75 ஓட்டங்கள் சேர்த்த நிகோலஸ் கடைசி விக்கெட்டாக ஆட்டமிழந்தார். 108.1 ஓவர்களில் நியூசிலாந்து அணி 328 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் அதிகபட்சமாக ஷொரிஃபுல் இஸ்லாம், மெஹதி ஹசன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், மொமினுல் ஹக் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்தது பங்களாதேஷ் அணி. ஷத்மான் இஸ்லாமும், மஹ்மதுல் ஹசன் ஜாயும் நிதான தொடக்கத்தை ஏற்படுத்தினர்.

இஸ்லாம் 22 ஓட்டங்கள் எடுத்த நிலையில், நீல் வோக்னரின் வேகத்தில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும், ஜோய் தொடர்ந்து நிதானம் காட்டி விளையாடி வருகிறார். புதிதாகக் களமிறங்கிய நஜ்முல் ஹொாசைன் ஷன்டோவும் அவருக்கு ஒத்துழைப்பு அளித்தார். இவர்களின் நிதானமான ஆட்டத்தால் பங்களாதேஷ் அணியின் ஓட்ட எண்ணிக்கை மெதுவாக உயர ஆரம்பித்தது. இருவரும் அரைச்சதம் கடந்த நிலையில், நஜ்முல் ஹொாசைன் ஷான்டோ 64 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

நேற்று 67 ஓவர்களை எதிர்கொண்டு 2 விக்கெட்கள் இழப்புக்கு 175 ஓட்டங்களை பங்களாதேஷ் அணி பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

மஹ்மதுல் ஹசன் ஜோய் 70 ஓட்டங்களுடனும், மொமினுல் ஹக் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

நியூசிலாந்தின் நீல் வோக்னர் 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)



# மேற்கிந்தியத்தீவு அணியில் மீண்டும் கிரன் பொலார்ட்!

*ஜமைக்கா, ஜன. 03*

இங்கிலாந்து இருபது - 20 தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் அணியில் காயத்திலிருந்து மீண்ட அணித் தலைவர் கிரன் பொலார்ட் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் ஜனவரி 22 முதல் 30 வரை பார்படாஸில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னதாக மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் ஓர் இருபது - 20 போட்டித் தொடரில் அயர்லாந்தை எதிர்கொள்கிறது. இந்தத் தொடர்கள் ஜனவரி முதல் 16 வரை ஜமைக்காவில் நடைபெறுகிறது.

இதற்கான அணியை மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. காயம் காரணமாக பாகிஸ்தான் தொடரில் விளையாடாத அணித் தலைவர் கிரன் பொலார்ட் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

**அணிவிவரம்,**

கிரன் பொலர்ட் ( அணித் தலைவர்), நிகோலஸ் பூரண், பேபியன் அலென் (இங்கிலாந்து தொடர் மட்டும்), டெரன் பிராவோ (இங்கிலாந்து தொடர் மட்டும்), ராஸ்டன் சேஸ், ஷெல்டன் காட்ரெல், டொமினிக் டிரேக்ஸ், ஷை ஹோப், அகீல் ஹொாசைன், ஜேசன் ஹோல்டர், பிராண்டன் கிங், கை மேயர்ஸ், ரோவ்மன் பாவெல், ரொமாரியோ ஷெபெர்ட், ஒடீன் ஸ்மித், ஹேடன் வோல்ஷ். (ஐ)

## இளையோர் உலகக் கிண்ணம்

# மேற்கிந்தியாவுக்கு சென்றது இலங்கை கிரிக்கெட் அணி!

*கொழும்பு, ஜன. 03*

ஐ.சி.சி.யின் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 2022 உலகக் கிண்ண ஆரம்ப நாள் நெருங்கி வருகின்ற நிலையில் ஒவ்வொரு அணிகளும் தங்கள் வீரர்களின் விபரங்களை வெளியிடத் தொடங்கியுள்ளன.

போட்டிகள் ஜனவரி 14 முதல் பெப்ரவரி 05 ஆம் திகதி வரை நடைபெறும். முதன் முறையாக கரீபியன் தீவுகளில் நடத்தப்படும் போட்டிகளில் 16 நாடுகள் பங்கேற்கவுள்ளதுடன், மொத்தம் 48 போட்டிகள் நடைபெறும்.

2022 இளையோர் உலகக் கிண்ண தொடரில் இலங்கை, ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து, பாகிஸ்தான், பப்புவா நியூகினியா, ஸ்கொட்லாந்து, தென்னாபிரிக்கா, உகண்டா, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே ஆகிய நாடுகள் பங்கேற்கும்.

இந்த தொடரில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற இளையோர் ஆசியக் கிண்ணத்தில் பங்கேற்ற 17 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை அணி, டுபாயில் இருந்து நேரடியாக மேற்கிந்தியத்தீவுகளுக்கு நேற்று புறப்பட்டது.

இலங்கை அணி அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய அணிகளுடன் ‘டி’ பிரிவில் விளையாடவுள்ளன.

இலங்கை தனது முதல் ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து அணியை ஜனவரி 14 அன்று ஜார்ஜ்டவுனில் உள்ள எவரெஸ்ட் கிரிக்கெட் கழக மைதானத்தில் எதிர்கொள்ளும்.



**இலங்கை அணி விபரம்**

துனித் வெல்லலகே (தலைவர்), ஷெவோன் டேனியல், அஞ்சல பண்டார, பவன் பதிராஜா சதீச ராஜபக்ஷ, வனுஜா சஹன் குமார, ரவீன் டி சில்வா (உப தலைவர்), ரனுத சோமரத்ன, மல்ஷா தருபதி, டிராவின் மெத்யூ, யாசிரு ரொட்ரிகோ, மதீஷ பத்திரண, சமிது விக்கிரமசிங்க, வினுஜா ரன்புல், சகுன லியனகே, அபிஷேக் லியனாராச்சி, சதீஷ ஜெயவர்த்தன.



# அரசின் பயணம் மிகவும் பயங்கரம்

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 03

**நாடு நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டிருக்கும்போது அரசு பயணிக்கும் விதமானது பயங்கரமாகவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வரலாற்றில் என்றுமில்லாதளவு, எமது நாட்டு மக்கள் பாரிய பிரச்னைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. விவசாயச் செய்கைக்கு போதிய உரம் இல்லை.

இதுபோன்ற பல்வேறு பிரச்னைகள் நாட்டில் தற்போது காணப்படுகின்றன. இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு எமது நாட்டில் அரசு ஒன்று இல்லை.

நமது நாட்டில் பாரிய நெருக்கடிகள் நிலவி வருகின்ற நிலையில் அரசு பயணிக்கும் விதமானது மிக பயங்கரமாக உள்ளது. ஏனெனில், நாட்டில் நிலவும் எந்தப் பிரச்னைகளுக்கும் ஜனாதிபதி பதில் கூறுவதில்லை. பொறுப்பெடுப்பதும் இல்லை.

நாட்டு மக்கள் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்கும்போது ஜனாதிபதியும் அரசும் பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கின்றனர்.

இந்த அரசு ஆட்சிக்கு வரும்போது எவ்வாறான கதைகளைக் கூறியது என்று யாவரும் அறிந்ததே.

நமது நாட்டில் சிறந்த தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ என்று கூறினர். அவர் மிகச் சிறந்த முறையில் நாட்டை ஆட்சி செய்து வருகின்றார் என்று கூறினர்.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து நாட்டை எவ்வாறு சீரழித்துள்ளனர் என்பது தற்போது தெரிகின்றது.

ஒவ்வொரு கதைகளைக் கூறி மக்களை முட்டாள்களாக்கிய தலைவர்கள் தற்போது எங்கே? அவர்களும் அரசுக்குள்ளே இருக்கின்றனர்.

இந்த அரசு தொடர்பில் நற்சான்றுபத்திரம் சமர்ப்பித்த விமல் வீரவன்ச போன்றவர்களால் அரசிலிருந்து வெளியேற முடியுமா? பொய்களைக் கூறி கூறி இந்த அரசை அமைத்தவர்கள் இன்று சாதாரண அரசு போன்று செயற்படுகின்றனர்.

நாட்டில் பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு இல்லை. நினைத்த நேரத்தில் பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது. அரிசி விலையை அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானிக்கின்றனர். மரக்கறிகளின் விலையை விற்பனையாளர்கள் தீர்மானிக்கின்றனர்" - என்றார். (இ)



# பண்டாரகமையில் விபத்து இளம் தம்பதி உயிரிழப்பு!

கண்டி, ஜன. 03

பண்டாரகமை - கெஸ்பேவை வீதியில் வெல்மில்ல பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் தம்பதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் பண்டாரகமை பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகமை - வல்கமையை சேர்ந்த 21 வயது ஆணும் அவரின் மனைவியான 19 வயது பெண்ணுமே உயிரிழந்தனர்.

இருவரும் கெஸ்பேவையில் இருந்து பண்டாரகமைம நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஜனாதிபதியை கேலி செய்த பெண்; சி. ஐ. டிக்கு அழைத்து விசாரணை!

கொழும்பு, ஜன. 03

ஜனாதிபதி வாகனத்தில் பயணித்து கொண்டிருந்த போது, "ஹூ"என்று சத்தம் எழுப்பி கேலி செய்த, காணொலிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன. அந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண் ணொருவர், குற்றப் புலனாய் வுப் பிரிவுக்கு (சி.ஐ.டி) அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்த விசாரணை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அப்பெண்,

"தன்னுடைய கைபேசியில் உள்ள தரவுகள் அனைத்துக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரியால், பிரதி செய்யப்பட்டுள்ளது" என்றார்.

ஜனாதிபதியை அவமதிப்பது கடுமையான குற்றமாகும். எதிர்காலத்தில் அவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டாமென தனது அறிவுறுத்தியதாகவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

நுகேகொடை, மிரிஹானை பிரதேசத்தின் ஊடாக ஜனாதிபதி தனது வாகனத்தில் பயணித்த போது, அங்கு பால்மா பைக்கெற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்றிருந்த மக்கள், "ஹூ" என்று சத்தம் எழுப்பி கேலி செய்திருந்தனர். (ஐ)

# அக்கரப்பத்தனை சம்பவம்; நால்வர் சந்தேகத்தில் கைது!

நுவரெலியா, ஜன. 03

அக்கரப்பத்தனை நகரத்தில் சித்திவிநாயகர் ஆலயத்தில் சிற்பங்கள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்து ஆலயமொன்று நகரில் இல்லாத காரணத்தினால் நகர மக்கள் இணைந்து சித்தி விநாயகர் ஆலயம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. இந்த ஆலயத்துக்கான கும்பாபிஷேகம், எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்தது.

இந்நிலையில், புதிதாக செதுக்கப்பட்ட 14 சிற்பங்களை, இனந்தெரியாத கும்பலொன்று நேற்றுமுன்தினம் இரவு உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட அக்கரப்பத்தனை பொலிஸார் ஆலய நிர்மாணப் பணியில் ஈடுபட்டு வந்தவர்களில் நால்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

# பெப்ரவரிக்குள் சுற்றுலாத்துறை இயல்பான நிலைக்குத் திரும்பும்

## அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை



கொழும்பு, ஜன. 03

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குள் சுற்றுலாத் துறை இயல்பு நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கின்றோம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் சுமார் ஒரு இலட்சத்திலிருந்து ஒரு இலட்சத்து 25ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நாடு வழமைக்குத் திரும்பியவுடன் குறைந்தது 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும், மத்திய கிழக்கு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைத்து நாட்டை முன்னைய நிலைக்குக் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் அவர் கூறினார்.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்தனர் எனவும், அதில் 86 ஆயிரம் பேர் டிசம்பர் மாதத்தில் மட்டும் வருகை தந்திருப்பது சிறந்த போக்கைக் பிரதிபலிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# முதியவர்களைப் பயன்படுத்தி பணம் வசூலிப்போருக்கு வலை

கொழும்பு, ஜன. 03

"முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைப் பயன்படுத்தி மக்களிடம் பணம் திரட்டி, அதனை வியாபாரமாகவே கொண்டு நடத்துபவர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டியுள்ளனர். அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்."

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சில பிள்ளைகள் தமது



பெற்றோரை வீதிகளில் விட்டுள்ளனர். இது தொடர்பில் அவர்களுடன் பேசுவோம். நிலைமையைத் தெளிவுபடுத்தி, மீள அழைத்துச் செல்லுமாறு கோருவோம். அவ்வாறு அழைத்துச் செல்லாதவர்களுக்குச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

வீதிகளில் அநாதரவாக உள்ள சிலர் தமது பிள்ளைகள் மற்றும் பாதுகாவலர்களிடம் செல்வதற்கு விரும்புவதில்லை. சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். அத்தகையவர்களைச் சமூக நலன்புரி திணைக்களத் திடம் ஒப்படைத்து, உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

அதேவேளை, முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைப் பயன்படுத்தி சிலர் மக்களிடம் பணம் பெறுகின்றனர். அவர்களுக்குச் சிறு தொகை வழங்கப்படுகின்றது. இது வியாபாரமாகவே நடக்கின்றது. அத்தகையவர்கள் தொடர்பான தகவல்கள் புலனாய்வுப் பிரிவு ஊடாகத் திரட்டப்பட்டுள்ளன. எனவே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (இ)

## சிங்கள - பௌத்த...

உள்ளது. இதற்காக நான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்படுவேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், இந்த நாட்டின் ஏனைய சகோதர மதத்தினரும் அச்சமோ சந்தேகமோ இன்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்றும் அவர் கூறினார்.

மஹா விஹாரவங்சிக கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ தர்ம மஹா சங்கம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று “ஸ்ரீலங்காதீஸ்வர பத்ம விபூஷண்” பட்டம் வழங்கியது. இதன்பின்னர் அங்கு கூடியிருந்த பௌத்த தேரர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அந்த உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

“எனது பெற்றோரின் பாரம்பரியத்தால் ஒரு பௌத்தராகப் பிறந்து, நாட்டின் முன்னணி பௌத்த பாடசாலைகளில் ஒன்றான கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நான் பெற்ற பயிற்சி, கல்யாண மித்திர மஹா சங்கத்தினரின் அறிவுரைகளைப் பின்பற்றிய உத்வேகம், இராணுவத்தில் நான் பணிபுரிந்தமையால் பெற்ற ஒழுக்கம் என்பன, எனது வாழ்க்கை மிகவும் சிறப்பானதாக மாறக் காரணமாய் அமைந்தன என்பதை இந்நேரத்தில் விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இராணுவ அதிகாரியாகவும் பாதுகாப்பு செயலாளராகவும் நான் நாட்டுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி, இன்று நீங்கள் என்னை கௌரவிக்கின்றீர்கள். எனது இருபது வருடகால இராணுவச் சேவையின் போது, ஈழப்போரின் ஆரம்ப காலத்திலும் இரண்டாம் ஈழப்போரின் போதும், வடக்கு, கிழக்கில் நான் பல முக்கிய பணிகளை செய்தேன்.

இந்திய அமைதி காக்கும் படை வருவதற்கு முன்னர், வடமராட்சி நடவடிக்கையின் நான்கு படைப்பிரிவுகளில் ஒன்றுக்கு நான் கட்டளையிடும் அதிகாரியாகப் பணி புரிந்தேன். இது அப்போது செயல்பாட்டில் இருந்த மிகப்பெரிய நடவடிக்கையாகும்.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகிய சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாணக் கோட்டையை விடுவிக்க முதல் இரண்டு படைப்பிரிவுகளில் ஒன்றுக்கு நான் கட்டளையிட்டேன். வெலிஓயா, வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் பல முக்கிய பணிகளைச் செய்தேன். அதற்காக ரணசூர (போர்வீரர்) மற்றும் ரண விக்ரம (போர்வீரர்) பதக்கங்களையும் ஜனாதிபதி விருதுகளையும் பெற்றேன்.

பாதுகாப்பு செயலாளர் என்ற வகையில் முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர நேரடியாகப் பங்களித்ததை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நான் பெரும்பான்மை சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்பதை, ருவன்வெலி மஹா சாயவுக்கு முன்பாக ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோது அறிவித்தேன். என்னை இந்த நாட்டின் முதல் குடிமகனாக ஆக்குவதற்கு பல அர்ப்பணிப்புகளைச் செய்த சிங்கள பௌத்தர்களையும் அவர்களின் பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் பூரண பொறுப்பு எனக்கு உள்ளது என நான் உறுதியாக நம்புகிறேன்.

இதற்காக நான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்படுவதுடன், நான் பெற்ற பௌத்த போதனைகளும் உத்வேகமும், இந்நாட்டின் ஏனைய சகோதர மதத்தினரும் அச்சமோ சந்தேகமோ இன்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்பதையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

எனது ஆட்சிக் காலத்தில், நமது புராதன பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு நாங்கள் செயல் ரீதியாக உறுதியளித்துள்ளோம் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## மட்டு. பொலிஸ்...

மாக உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கீரிமலை, கூவில் வீதியில் உள்ள வாடகை வீட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரமணன் (வயது-47) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவரின் குடும்பத்தினர் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு சென்றிருந்த நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் தனியாக இருந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-3)

## எந்த...

அது தொடர்பில் அதிக கரிசனை செலுத்துகிறோம். வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக உள்ளார் என்றும் முஸ்லிம் மக்களின் சகல விடயங்களும் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு இந்த செயல்பாடு முன்னெடுக்கப்படும் எனவும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ஐ)

## 15 ஆயிரத்தை...

கரிப்பு இடம்பெற்றுள்ளது.

*20* ஆண்களும், நான்கு பெண்களுமே இவ்வாறு உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்றினால் இலங்கையில் பாதிப்படைந்து உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 19ஆகப் பதிவாகியுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

தாக ஜனாதிபதி ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை ஸ்ரீ கல்யாணி சம கிரிதர்ம மகா சங்கத்தினரால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மக்களை...

என்று, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இணை ஊடகப் பேச்சாளருமான எஸ்.எம்.மரிக்காரின் கொலன்னாவ தேர்தல் தொகுதியின் வாக்களிப்பு நிலையங்களின் தலைவர்கள் நியமனம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்துரைத்துள்ள அவர்,

வால்வு மாற்றத்தினால் எரிவாயு பிரச்னை இன்னும் சில வாரங்களுக்கு தீர்க்கப்படாது என்று, அரசாங்கப் பிரதிநிதிகள் கூறுகின்றனர். உண்மையில் மாறியது எரிவாயு வால்வுகள் அல்ல, அரசாங்க வால்வுகளே. வால்வுகளை மாற்றியுள்ள அரசாங்கத்தை விரட்டி அடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எரிவாயு பிரச்சினை தொடங்கிய நாள் முதல் எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து தகவல்களையும் நாட்டுக்கு அம்பலமாக்கியுள்ளது. விடயத்திற்குப் பொறுப்பான இரண்டு அமைச்சர்கள் உட்பட முழு அரசாங்கமும் பதில் சொல்லாமல் தப்பிச் சென்றுள்ளனர்.

மக்களின் கண்ணீரின் வலியை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. ஈஸ்டர் தாக்குதல் போன்ற சம்பவங்களினூடாக பிணங்களின் மீது ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் அக்கறை காட்டவில்லை. அரசாங்கத்தின் மீதான கோபத்தை மக்கள் கூச்சல் போட்டு வெளிப்படுத்தி வருகின்றனர் என்று, தெரிவித்துள்ளார். (கே)

# ரயில் கட்டணத்தை உயர்த்த கோரிக்கை

*கொழும்பு, ஜன. 03*

ரயில் கட்டணத்தை அதிகரிக்குமாறு ரயில்வே திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளதாக போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதற்கும், நட்டத்தில் இயங்கும் நிறுவனமாக விமர்சிக்கப்படுவதற்கும் கட்டணங்கள் அதிகரிக்கப்படாததும் ஒரு காரணம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள் ளது.

## சுமந்திரன்...

தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு எழுதும் கடிதம் தொடர்பில் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1987இல் யாருக்காக ஒப்பந்தம் எழுதப்பட்டதோ அவர்களோடு போரிடுவதாகவே இறுதியில் அந்த ஒப்பந்தம் இருந்தது. அதனால் இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தால் எமக்கு எந்த முன்னேற்றமும் கிடையாது. இந்தியா எப்போதும் இலங்கையில் பூகோள ரீதியில் கரிசனையாக இருந்தாலும் ஆட்சி அதிகாரத்தில் இந்திய மாநில அதிகாரத்துக்கு மேலதிகமாக இருக்கக்கூடாது என்பதிலும் குறியாக இருக்கின்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அடிப்படையில் சூழலில் வேறுபாடு உண்டு.

ஜெயலலிதா நிறைவேற்றிய கண்டனத் தீர்மானத்தை குறைக்கும் வகையிலான ஓர் கோரிக்கையை நாம் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்ராலினிடம் முன் வைக்கப்போகின்றோம். இதனை ஏன் கட்சியில் இன்னும் விரிவாகப் பேசவில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான பார்வை இருந்திருக்கவேண்டும். தெளிவாகப் பயணிக்க வேண்டிய கூட்டமைப்பும் குழம்பியிருக்கின்றதோ என்ற எண்ணம் பலரிடம் தோன்றுகின்றது.

முதலில் எழுதிய கடித்த்தில் சமஷ்டி வடிவில் எமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பல விடயங்கள் இருந்தன. ஆனால் தற்போது

இரண்டாவதாக எழுதிய வரைவில் பல விடயங்கள் நீக்கப்பட்டிருப்பதனால் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்துள்ளது.

தேர்தலை நடத்துமாறு கோர பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதவேண்டிய அவசியமோ நியாயமோ இல்லை. ஏனெனில் இந்த அரசு போன்று நாம் தேர்தலைக் கண்டு பயப்பிடவில்லை. தேர்தலுக்கு கூட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது.

வெளியில் ஒரு மாயை உண்டு. அதாவது ரெலோ கொண்டு வந்த நல்ல விடயத்தை தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பதாக எண்ணுகின்றனர். இந்த 13ஐ கோருவது தான் அந்த நல்ல விடயம்.

இந்தியாவின் கொல்லைப்புறம் இன்னுமோர் நாடு வந்த பின்பும் அயல் நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடமாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப்போகின்றதா என்பதை இந்தியா தான் சிந்திக்க வேண்டும்.

ரவூவ் ஹக்கீமைப் பொறுத்தமட்டில் அவரது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் தமிழர்களின் தீர்வு விடயத்தில் எவ்வாறு தீர்வை முன்வைப்பது.

எங்கள் கொள்கையோடு நில்லுங்கள் என நாம் அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது. அதேபோல் தமது நிலைப்பாட்டுடன் ஒத்துபோகவேண்டும் என அவர்கள் எம்மை திணிக்க முடியாது-என்றார். (அ)

## பாடசாலை...

வர் போக்குவரத்து சேவை சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத்,

“அரசாங்கம் கடந்த வாரம் எரிபொருட்களின் விலை அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் எமக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் அரசாங்கத்திடம் கேட்டிருந்தோம்.

ஆனால், இதுதொடர்பாக அரசாங்கம் சார்பாக யாரும் இதுவரை எம்மை அழைத்து பேசவில்லை. பாடசாலைகள் விடுமுறை முடிந்து நாளை (இன்று) மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன. அதனால் பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணத்தை அதிகரிப்பதை தவிர எமக்கு வேறு வழியில்லை - என்றார். (ஐ)

## இந்தியா...

இந்தக் கடன் டொலர் பற்றாக்குறையை சமாளிக்கவும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கும் வழங்கப்படவுள்ளது.

எனினும், இந்த கடன் பணமாக பெறப்படாமல் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான கடன் வசதியாக பயன்படுத்தப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், எரிபொருள் கொள்வனவுக்கு 50 கோடி அமெரிக்க டொலர்களையும் பரிமாற்றக் கடனாக 40 கோடி அமெரிக்க டொலர்களையும் வழங்க இந்தியாவும் சம்மதித்துள்ளது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அண்மைய இந்தியப் பயணத்தின்போது இந்திய அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் பலனாக இந்த கடன் வசதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அண்மையில் சீனாவிடமிருந்து 150 கோடி அமெரிக்க டொலர் கடனுதவி கிடைத்துள்ளதாகவும், கடனாக ஒரு வருடத்தில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் கட்டாரிடமிருந்து 50 கோடி அமெரிக்க டொலர்கள் பெறப்பட உள்ளதாகவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## கப்ரால், ஆட்டிக்கல...

வாரம் கூட்டம் நடத்தப்படாததாலும், நேரம் தொடர்பாக சிக்கல் எழுந்துள்ளமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த அமைச்சரவை கூட்டத்துக்கு மத்திய வங்கியின் ஆளுநரும் நிதியமைச்சின் செயலாளரும் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 42,500 பட்ட...

ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாக அமைச்சரவை உபகுழுவின் தலைவரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியின் பிரதிபலனாக உயர்கல்வி கற்றவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் ஜனாதிபதியின் கொள்கை திட்டத்திற்கு அமைவாக இந்த நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது.

53 ஆயிரம் பயிலுநர் பட்டதாரிகள் தற்போது அரச நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றுகின்றனர். இவர்களில் ஒருவருடப் பயிற்சியை நிறைவு செய்த 42 ஆயிரத்து 500 பேருக்கு இன்று முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

அத்துடன் கடந்த வருடம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பயிலுநர் பட்டதாரிகளாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இனப்படுகொலை செய்யும் அரசே ஆட்சியில் உள்ளது!

## சஜித் காட்டம்



**கொழும்பு, ஜன.03**

**“அரசு என்ற ஒன்று அமைக்கப்படுவது மக்களைக் காக்கவே ஆகும். துரதிஷ்டவசமாக இலங்கை அரசு மக்களைக் கொல்லாமல் கொல்கின்றது. இவ்வாறு நோக்கும்போது தற்போதைய அரசு இனப்படுகொலை செய்யும் அரசாகவே உள்ளது.”**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இணை ஊடகப் பேச்சாளருமான எஸ்.எம்.மரிக்காரின் கொலன்னாவ தேர்தல் தொகுதியின் வாக்களிப்பு நிலையங்களின் தலைவர்களுக்கு நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வால்வு மாற்றத்தால் எரிவாயு பிரச்னை இன்னும் சில வாரங்களுக்கு தீர்க்கப்படாது என அரச பிரதிநிதிகள் கூறுகின்றனர். உண்மையில் மாறியது எரிவாயு வால்வுகள் அல்ல, அரச வால்வு களே காரணம். எனவே, வால்வுகளை மாற்றியுள்ள அரசை விரட்டியடிக்க நடவடிக்கை எடுக்க மக்கள் அணி திரள வேண்டும்.

எரிவாயு அனர்த்தம் தொடங்கிய நாள் முதல் எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி அனைத்துத் தகவல்களையும் நாட்டுக்கு அம்பலமாகியுள்ளது.

விடயத்துக்குப் பொறுப்பான இரண்டு அமைச்சர்கள் உட்பட முழு அரசும் பதில் சொல்லாமல் தப்பிச் சென்றுள்ளனர்.

வீடுகள் வெடித்துச் சிதறும், சமையல் அறைகள் எரியும், உயிர்ப் பலியாகும் பாரிய அவலத்தை உருவாக்கியவர்கள் இந்த அரச தரப்பினர்.

விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இருவரும் அன்று பொய் சொன்னார்கள். இன்று எரிவாயு நிறுவனத்தின் தலைவர், அவர்கள் சார்பாகப் பொய் சொல்ல முன்வந்துள்ளார்.

அரசு என்ற ஒன்று அமைக்கப்படுவது மக்களைக் காக்கவே. துரதிஷ்டவசமாக இலங்கை அரசு மக்களைக் கொல்லாமல் கொல்கின்றது. இவ்வாறு நோக்கும்போது தற்போதைய அரசு இனப்படுகொலை செய்யும் அரசாகவே உள்ளது.

மக்களின் கண்ணீரின் வலியை அரசு பொருட்படுத்தவில்லை. ஈஸ்டர் தாக்குதல் போன்ற நிகழ்வுகளின் மூலம் பிணங்களின் மீது ஆட்சிக்கு வந்த இந்த அரசு, மக்களின் பிரச்னைகளுக்கு ஒருபோதும் அக்கறை காட்டவில்லை.

தாங்க முடியாத அழுத்தத்தை எதிர்கொண்டு நாட்டை ஆள்பவர்கள் மீது கூச்சல் போட்டு மக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்” - என்றார். (இ)



மட்டக்களப்பில் பெண் கொலை;

# இரு சந்தேகநபர்களையும் பிடித்த இளைஞர்களுக்கு கௌரவிப்பு!

மட்டக்களப்பு, ஜன. 03

மட்டக்களப்பு மாநகரின் பார் வீதியில் பெண்ணை கத்தியால் குத்திவிட்டு நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பி ஓடியவர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த இளைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்விலேயே இந்த இளைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 20.12.2021ஆம் திகதி பார் வீதி பகுதியில் வர்த் தகர் ஒருவரின் மனைவியை வெட்டிக்கொலை செய்து விட்டு தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பி சென்ற நபர்கள் இருவரையும் துரத்தி சென்று பிடித்து அவர் களை பொலிஸாரிடம் ஒப்படைத்த ரத்தினம் ஜனேஸ் ராஜா மற்றும் தங்கராசா பரமேஸ்வரன் ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தின் தலைவர் மாமாங்கராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நா.மயூரன், கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ந. பிள்ளைநாயகம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் க.கலாரஞ்சனி, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பு கிளை தலைவர் டி வசந்தராஜா, மட்டக்களப்பு 231 வது இராணுவ படை பிரிவு கட்டளை அதிகாரி கேணல் டிலூபா பண்டார மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# புதிய அரசியல் கூட்டணி: அடுத்த வாரம் பேச்சுகள்

## அமைச்சர் அமரவீர தகவல்

கொழும்பு, ஜன. 03

அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடன் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவது சம்பந்தமான பேச்சுகளை அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மக்கள் ஐக்கிய முன்னணி, புதிய ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் ஆரம்ப கட்ட பேச்சுகளை நடத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.எதிர்காலத்தில் அரசில் அங்கம் வகிக்கும் மேலும் சில கட்சிகள் மற்றும் தேசிய அமைப்புகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதிய ஆண்டில், நாட்டுக்குச் சார்பான புதிய அரசியல் சக்தியைக் கட்டியெழுப்பத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)




# நாட்டை இராணுவ மயமாக்க அரசு முயற்சி!

## இராதாகிருஷ்ணன் எம். பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 03

நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வரும் சூழ்நிலையில், அரசு நாட்டை இராணுவ மயமாக்க முயற்சி செய்து வருகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெ.சந்திரசேகரனின் 12ஆவது சிரார்த்த தினம், முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டின் அனைத்துத் திணைக்களங்களினதும் அரச நிறுவனங்களினதும் செயலாளர் பதவிகள், அரச நிர்வாக சேவை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவதற்குப் பதிலாக ஓய்வு பெற்ற இராணுவ உயர் அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இராணுவ அதிகாரிகள் நன்றாகப் போர் செய்யும் திறமைப் பெற்றவர்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும், அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் போன்று பொருளாதார ரீதியாக தீர்மானம் எடுக்கக்கூடிய அனுபவமும் இயலுமையும் அவர்களிடம் இல்லை.

இதன் காரணமாக இன்று நாடு அதாள பாதாளத்தில் வீழ்ந்து மீண்டெழ முடியாத நிலையில் உள்ளது. அனைத்துத்துறைகளும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையால் இராணுவமயமாக்கலிலிருந்து மீண்டு ஜனநாயகத்தை நிலைநாட்ட நாட்டு மக்கள் ஒன்றுதிரண்டு வீதிக்கு இறங்கிப் போராட வேண்டும்.

மத்திய வங்கியின் ஆளுநர் நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க நாணயத்தாள்களை அச்சடித்து வெளியிடுவதைத் தொழிலாக செய்து வருகின்றார். இதனால் பணவீக்கம் அதிகரித்து டொலருக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இந்நிலை தொடர்வதால், நாட்டில் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு, பால்மா, எரிவாயு, கோதுமை என அனைத்துப் பொருட்களுக்கும் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டில் எல்லாத் துறைகளிலும் ஊழல், மோசடி தலைவிரித்தாடுகின்றது” - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ராவண், ஜெகமே
தந்திரம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா

**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் நிதி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு